# அதிபர் நாஸர் மயிரிழையில் உயிர் தப்பினர்

Registered as a News paper in Ceylon விலை சதம் 15

எங்கும் கிடைப்பது
பி.வி.எம்.ஓரென்ஜ் பீடிகளே!



# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily
தபால் பெட்டி எண் 49
போன்: 389
மலர் 11
இதழ்: 332
தேசிய தினசரி
மார்கழி 27 ஜுல்கஃ 2 ஞாயிற்றுக்கிழமை [11-1-70

எல்லோரும் விரும்புவது
பி.வி.எம்.ஓரென்ஜ் பீடிகளே!



கெய்ரோ, ஜன 10

ஐக்கிய அரபுக்குடியரசுத் தலைவர் அப்துல் நாஸரும் லிபியா ஜனாதிபதி கஸாபியும் கடந்தமாதம் விமான விபத்தொன்றிலிருந்து மயிரிழையில் உயிர்தப்பியிருக்கிறார்கள்.

இந்தத்தகவல் இப்பொழுதுதான் வெளியாகியிருக்கிறது. விமானம் ஒன்றில் இருதலைவர்களும் புறப்பட்டவுடன் விமானத்தில் கோளாறு ஏற்பட்டு ஏறத்தாழ விழுந்து நொடுங்கும் கட்டத்தையடைந்ததாகவும், பெரும் சிரமத்துடன் ஆபத்தில்லாமல் விமானம் இறக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. இருதலைவர்களும் திரிபொலியிலிருந்து பெங்காஸிக்குப் புறப்பட்ட பொழுது இந்தவிமான விபத்து ஏற்பட்டதாம் இந்தச்சம்பவம் பற்றி விரிவான விசாரணையொன்றும் நடத்தப்படுகின்றது.



இந்தவிமானம் விபத்துக்குள்ளானதற்கு நாசவேலை காரணமாய் இருந்திருக்கலாம் என்று சந்தேகம் எழுந்திருப்பதாக சிலவட்டாரங்கள் கூறின.

# ஜனாதிபதி கிரிக்கு இன்று யாழ். நகரில் வரவேற்பு

## நல்லூர்க் கோவிலிலும் வழிபாட்டுக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஞாயிறு

**பாரதக் குடியரசுத் தலைவர் திரு. வெங்கட கிரி வராக கிரி அவர்களையும், அவரது துணைவியாரையும், குழுவினரையும் அன்புடன் வரவேற்பதற்கு இன்று வடபகுதி தமிழ்பேசும் பொது மக்கள் ஆவலோடு காத்திருக்கிறார்கள்.**

வாழ்நாள் முழுவதையும் வீழ்ந்துபட்ட சாதாரண மக்களின் உயர்வுக்காகவே அர்ப்பணம் செய்தவரும் இன்று பாரதக்குடியரசின் மிகஉயர்ந்த பதவியிலிருப்பவருமான திரு. கிரி அவர்கள் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்வது தமிழ்பேசும் மக்களுக்கு பெருமையையும் அளவில்லா மகிழ்ச்சியையும் அளிப்பதாயுள்ளது.

பாரத ஜனாதிபதி திரு வி. வி. கிரிக்கு யாழ்ப்பாணம் மாநகரசபை இன்று காலை 10 மணிக்கு நகர மண்டபத்தில் பொதுவரவேற்பு அளிக்கப்படும். பிற்பகல் 2 மணிக்கு ஜனாதிபதி தமது தோஷ்டி...

...இதழ் வாசித்து அளிக்கப்படும், சித்திரவேலைப்பாடுகள் அமைந்த வெள்ளிப் பேழையில் ... புப்பத்திரம் ... வழங்குவார். இதைத் ... ர்க்கு மேயர் திரு.

தகவல் ஒலிபரப்பு அமைச்சர் திரு. கே. குஜரால், திருமதி குஜரால், ஜனாதிபதியின் ...னர், டாக்டர் ... சிங், வெளிவிவகார அமைச்சின் செயலாளர் திரு. வின்சென்ட் ...யா

விஜயம் செய்வார்கள்.

ஜனாதிபதியை வரவேற்க யாழ்ப்பாணமாநகரம்விழாக் கோலம் பூண்டுள்ளது. நகர மண்டபம் மாவிலை தோரணங்களாலும், கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டுள்ளது. இலங்கை, இந்திய தேசிய கொடிகள் சந்திக்கு சந்தி பறக்கவிடப்பட்டுள்ளன. ஜனாதிபதி ஊர்வலமாக வரும் வீதியெல்லாம் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

வீடுகள் ஸ்தாபனங்கள், கல்லூரிகள் ஆகியன அலங்கரிக்கப்பட்டுள்ளன. வீடுகள் கடைகள் தோறும் பூரண கும்பங்கள்வைத்து ஜனாதிபதியை வரவேற்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மணிக்கூண்டு சந்தியிலிருந்து நகரமண்டபம்வரை மங்களவாத்திய இசையுடன் ஜனாதிபதி அழைத்துச் செல்லப்படுவார். ஜனாதிபதி ஊர்வலமாக செல்லும் பாதைகளில் பாடசாலை மாணவர்கள் அணிவகுத்து நிற்பார்

## ''இவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்படமாட்டாது''

—பிரதமர்

கோட்டை.சனி

'ஒழுங்கற்ற செயல்களை புரிவதன்மூலம்குற்றவாளிகளாகக் காணப்படும். தனிப்பட்டவர்களுக்கு எந்தவித பாதுகாப்பும் அளிக்கப்படமாட்டாது' என்றுபிரதமர் திரு டட்லி சேனநாயகா இன்றுஆட்சி மன்றத்தில் கூறினார்.

'லேக் கவுஸ்' ஸ்தாபனத்தின்மீது டாக்டர் என். எம். பெரேராவினால் கொண்டு வரப்பட்ட பிரேரணை சம்பந்தமாகப் பிரதமர் பதிலளித்துப் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கையிலிருந்து மூன்று அதிகாரிகள் இதுசம்பந்தமாக விசாரணைசெய்வதற்கு லண்டன் சென்றுள்ளார்களென்றும் பாரபட்சமற்ற நடவடிக்கைஇவ்விஷயத்தில் மேற்கொள்ளப்படுமென்றும் பிரதமர் மேலும் கூறினார்.

## சுங்கப்பகுதி கொள்ளை விசாரணை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் சுங்கபகுதி ... தர்மராசா,ரஞ்சித்பேரேரா பெரேரா, தல்காரு ஆகிய

## வின்சன்ட் பெரேரா கொழும்புபுதியமேயர்

கோட்டை.சனி

கொழும்பு மாநகரசபையின் புதிய மேயராக ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த திரு. வின்சன்ட் பெரேரா இன்று தெரிவுசெய்யப்பட்டார்.

இன்று பிற்பகல் நடந்த கொழும்பு மாநகர மேயர் தெரிவில் திரு. வின்சன்ட் பெரேராவுக்கு31 வாக்குகள் கிடைத்தன.இவரை எதிர்த்துப் போட்டியிட்ட எதிர்க்கட்சி அங்கத்தவர் திரு. சார்ல்ஸ் வேதக்கனுக்கு 15 வாக்குகள் கிடைத்தன.

உதவிமேயராக திரு.மல்லவராய்ச்சி தெரிவுசெய்யப்பட்டார்.

## வெள்ள அகதிகளுக்கு ரூ. 500 நிவாரணம்

கோட்டை, சனி

வெள்ள அகதிகளுக்கு வழங்கப்படும் நிவாரண நிதி 500 ரூபாய் ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது மாதம் 200 ரூபாய்க்குட்படச் சம்பளம் பெறுபவர்களுக்கு இந்த நிவாரணப் கிடைக்கும்.

இன்று கூடிய அமைச்சரவை இந்த முடிவை எடுத்துக்கொண்டது.

## தேநீர்க் கடைகளில் சமத்துவம்; பட்டினசபைத் தலைவ பாராட்டு

யாழ்ப்பாணம், ஞாயிறு

சங்கானையில் சகல சமூகத்தவர்களுக்கும் தேநீர் கடைகளை திறந்துவிட்ட சகல தேநீர்கடை உரிமையாளர்களையும் இதற்கான முயற்சி எடுத்துவந்த தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தையும், சங்கானை பட்டினசபைத் தலைவர் திரு. சி. வைரமுத்து பாராட்டியுள்ளார்.

இதுசம்பந்தமாக திரு. வைரமுத்து வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் கூறியிருப்பதாவது: நீண்டகாலமாவே தமிழ்த் தலைவர்கள் தமிழ்மக்களின் ஐக்கியத்தைப்பற்றி பேசிவருகின்றனர். ஆனால் ஐக்கியம் உருவாக்கப்பட்டதற்கான சாத்தியக் கூறுகள் தென்படவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசாரணை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு
யாழ்ப்பாணம் சுங்கபகுதி கொள்ளை சம்பந்தமாககைது செய்யப்பட்ட நான்கு சந்தேக நபர்களும் நேற்று யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு டயஸ் முன்னிலையில்ஆஜர்செய்யப்பட்டனர்.

கைவிரல் அடையாளங்கள் எடுத்து பரிசோதனைக்கு அனுப்பப்பட்டிருப்பதாக கோர்ட்டில் தெரிவிக்கப்பட்டது.

தர்மராசா,ரஞ்சித்பேரேரா பெரேரா, தல்காரு ஆகிய நான்கு சந்தேக நபர்கள் சார்பிலும் வழக்கறிஞர்கள் ஆஜராகியிருந்தார்கள்.

1ம் 2ம் 3ம் சந்தேக நபர்கள் சார்பில் புரக்டர் ஏ: அன்ரனியும், 4வது சந்தேக நபர் சார்பில் புறக்டர் எஸ். சிற்றம்பலமும் ஆஜரானுர்கள் மாஜிஸ்டிரேட் விசாரணையை இம்மாதம் 24ம்திகதிக்கு ஒத்திவைத்தார்.

## 'சுருட்டுத்தொழிலாளரின் போராட்டம் ஓயாது

—துரைராசசிங்கம்

யாழ்ப்பாணம், ஞாயிறு
'சுருட்டுத்தொழிலாளரின் பதினைந்து ரூபாய்கூலிசரியாகக் கிடைக்கும்வரை எமது போராட்டம் ஓயாது. நல்லூர் சுதுமலை ஆகியஇடங்களிலுள்ளஇரு பிரபலசுருட்டு முதலாளிமார்கள் இந்தக் கோரிக்கைப்படி சம்பளம் வழங்கியிள்ளார்கள். இதே போன்று மற்றும் சிலமுதலாளியார்கள் இந்தக் கூலியை வழங்கியுள்ளனர். இதே போன்று எல்லா முதலாளிமார்களிடமும் சுருட்டுத் தொழிலாளர்கள் சரியான கூலியைப் பெறவேண்டும். இல்லையேல், உடனடியாக சங்கத்துக்கு அறிவித்தால், சங்கம் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

அகில இலங்கை ஐக்கிய சுருட்டுத்தொழிலாளர் சங்க கூட்டத்தில் சங்கத் தலைவர் திரு. ஆ. துரைராசசிங்கம் பேசுகையில் குறிப்பிட்டார்.

## சமாதான நீதவானுக நியமனம் பெற்ருர்

### 45 வருட சமூகப் பணியாற்றியவர்

கோட்டை, சனி
அகில இலங்கை இந்து மாமன்றத்தின் கௌரவ பொதுச்செயலாளரான திரு. ஆறுமுகம் சின்னத்தம்பியை கொழும்பு மாவட்ட சமாதான நீதவானுக நீதி அமைச்சர் கௌரவ ஏ. எவ். விஜயமானே நியமித்துள்ளார்.

கொழும்பு கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபை, கொழும்பு விவேகானந்த சபை, திருக்கேதீச்சர ஆலயத்திருப்பணிச் சபை உட்பட பல சமய ஸ்தாபனங்களில் பல்லாண்டுகள் தொடர்ச்சியாகத் தொண்டாற்றிவரும் இவர், கொழும்பு மாநகரசபையில் சுமார் நாற்பது வருட காலம் கடமைபுரிந்து பதில் கணக்காளராகவும் பதவி வகித்தவர். குறிப்பாகக் கொழும்பு கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபையில் கடந்த 44 வருடமாக இவர் முக்கிய பங்குகொண்டு கொழும்பிலும் மாத்தறையிலும் உழைத்து வருபவராவர். மருதானையிலுள்ள கப்பித்தாவத்தை ஸ்ரீபால செல்வ விநாயகமூர்த்தி கோவிலின் இன்றைய உன்னத நிலைக்கு 1936 ஆம் ஆண்டிலிருந்தே பாடுபட்டுழைத்த மிக முக்கியமானவர்களில் இவர் ஒருவராவர். மேற்படி கோவிலின் முகாமையாளராகவும், பிரதம முகாமையாளராகவும் இவர் கடந்த முப்பத்துமூன்று வருடங்களாகக் கடமையாற்றி வருகின்ருர்.

1954-ஆம் ஆண்டில் கொழும்பில் தமிழ்க் குழந்தைகளின் கல்விக்கு இடையூறுகள் நேர்ந்த போது மருதானை தொண்டர் வித்தியாலயம் தோன்றக் காரணகர்த்தர்களாக இருந்த முக்கிய பிரமுகர்களில் திரு. சின்னத்தம்பியும் ஒருவராக விளங்கினுர். மருதானையில் இன்று அழகுற நிறுவப்பட்டுள்ள கொழும்பு கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபையின்

(4-ம் பக்கம் பார்க்க)

வி. கிரிக்கு யாழ்ப்பாணம் மாநகரசபை இன்று காலை 10 மணிக்கு நகர மண்டபத்தில் பொதுவரவேற்பு அளிக்கப்படும். பிற்பகல்2மணிக்கு ஜனதிபதி தமது கோஷ்டியினருடன் நல்லூர் கந்தசாமி கோவிலுக்குச் சென்று வழிபடுவார்.


ஜனதிபதியை வரவேற்க யாழ்ப்பாண நகரம் விழாக்கோலம் பூண்டுள்ளது நகர மண்டபத்தில் நடைபெறும் வரவேற்பின்போது தமிழிலும் ஆங்கிலத்திலும், வரகப்படும், சித்திரவேலைப்பாடுகள் அமைந்த வெள்ளிப் பேழையில் வைத்து வரவேற்புப்பத்திரத்தை மேயர் வழங்குவார். இதைத் தொடர்ந்து மேயர் திரு. எஸ் நாகராசாவினுல் ஜனதிபதிக்கு தேநீர்விருந்து அளிக்கப்படும். நண்பகல் போசனத்தைமுடித்தபின்னர் பிற்பகல் 2 மணிக்கு நல்லூர்க் கந்தசாமி கோவிலுக்கு செல்வார்.

ஜனதிபதி கிரியுடன் திருமதி கிரி. இந்திய ராஜாங்க தகவல் ஒலிபரப்பு அமைச்சர் திரு. கே. குஜரால், திருமதி குஜரால், ஜனதிபதியின் செயலாளர், டாக்டர் நாகேந்திரசிங், வெளிவிவகார அமைச்சின்செயலாளர் திரு. வின்செண்ட், ... யாப்ஹோ, ராணுவச் செயலாளர் மேயா அமிர்சிங், பிரதம பாதுகாப்பு அதிகாரி திரு. பிரிதிசிங் மற்றும் 15 அதிகாரிகளும், 14 இந்திய பத்திரிகை பிரதிநிதிகளும், அகில இந்திய வானெலி பிரதிநிதியும், இந்திய தகவல் ... படப்பிடிப்பாளரும்

மங்களவாத்திய இசையுடன் ஜனதிபதி அழைத்துச் செல்லப்படுவார். ஜனதிபதி ஊர்வலமாக செல்லும் பாதைகளில் பாடசாலை மாணவர்கள் அணிவகுத்து நிற்பார்கள்.

முயற்சி எடுத்துவந்த தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தையும், சங்கானை பட்டினசபைத் தலைவர் திரு. சி. வைரமுத்து பாராட்டியுள்ளார்.

கியத்தைப்பற்றி பேசிவருகின்றனர். ஆனுல் ஐக்கியம் உருவாக்கப்பட்டதற்கான சாத்தியக் கூறுகள் தென்படவில்.



பாரத ஜனதிபதி திரு. வி. வி. கிரி இலங்கை மகா தேசாதிபதி திரு. வில்லியம் கோபல்லவாவுடன் காணப்படுகிருர்.

புத்தரின் இரு பெரும் சீடர்களின்

## புனித சின்னங்கள் இங்குவர காரணமாய் இருந்தவர் நேருஜி

### பௌத்த விகாரையில் பாரத ஜனதிபதி அஞ்சலி

கோட்டை, சனி
பாரதக் குடியரசுத் தலைவர் திரு. வெங்கடகிரி வராககிரி இன்று மாளிகந்தையிலுள்ள பௌத்த விகாரைக்கு விஜயஞ்செய்து விசேஷ பூசையொன்றில் கலந்துகொண்டார்.

இந்த விகாரையில் புத்த பெருமானின் இரு சீடர்களின் புனித சின்னங்கள் வைக்கப்பட்டுள்ளன.

இந்த விகாரையில் ஜனதிபதி கிரி பேசுகையில், இரு நாடுகளுக்குமிடையில் பல நூற்ருண்டுகளாக இருந்து வரும் பாரம்பரிய சமய, கலாசாரத் தொடர்புகளை நினைவுகூர்ந்தார்.

பல நூற்ருண்டுகளுக்கு முன் பௌத்த மதம் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டுப் பேணிப் பாதுகாக்கப்பட்டு வருவதை அவர் வியந்துரைத்தார்.

மகாபோதி சங்கம் அளித்த வரவேற்பில் அவர் இவ்வாறு புகழுரை நிகழ்த்தினுர்.

உத்தரின் இரு பெரும் சீடர்களின் புனித சின்னங்களைப் பெற்று அவைகள் இலங்கையிலேயே கோயில் கொள்ளச் செய்வதற்குக் காலஞ்சென்ற பிரதமர்நேரு காரணமாய் இருந்தாரென்பதை திரு. கிரி நினைவுகூர்ந்தார். இந்த விகாரையில் புத்தரின் இரு பெரும் சீடர்களை ஏன் புத்த பெருமானுக்கே வணக்கம் செலுத்தி வந்திருக்கிறேன் என்ருர் கிரி.

## பலாலி விமான நிலையத்தில் பிரமாண்டமான வரவேற்பு

மாவிட்டபுரம், ஞாயிறு
கொழும்பிலிருந்து இன்று யாழ்ப்பாணம் வரும் பாரத ஜனதிபதி திரு.வி.வி.கிரிக்கு முதலில் பலாலி விமான நிலையத்தில் இராஜ மரியாதையுடன் பிரமாண்டமான வரவேற்பு அளிக்கப்படும்.

பலாலி விமான நிலையத் தளபதி திரு.நடராசா, வலி வடக்கு காரியாதிகாரி திரு. பி.எல்.பற்றிக்ஸ் தலைமையிலான குழு இருநாட்டுகலாச்சாரங்களை பிரதிபலிக்கும் முறையில் சிறப்பான முறையில் விமான நிலையத்தை அலங்காரம் செய்துள்ளது.

இலங்கையின் முன்னுள் ஹைகமிஷனரும், இந்திய ஜனதிபதியான திரு. வி. வி. கிரி பலாலி விமானநிலையத்தில் இன்று காலை 9.30 மணிக்கு வந்திறங்குவார். திரு. கிரி விமானத்திலிருந்து இறங்கியதும் அரசாங்க அதிபர் திரு.பிரான்சிஸ் பீட்டர்ஸ் மலர்மாலை அணிந்து வரவேற்பார். திருமதி கிரியை அரசாங்க அதிபரின் பாரி பார் மலர்மாலை சூட்டி வரவேற்பார்.

அடுத்து காங்கேசன்துறை ஆட்சிமன்ற உறுப்பினர் திரு எஸ் ஜே வி செல்வநாயகம் உட்பட வட பகுதி ஆட்சிமன்ற உறுப்பினர்களும் வரவேற்பார்கள்.

மங்கள கீதம் முழங்க அழைத்து வரப்பட்டு விசேட பந்தலின்முன் வைத்து மயிலிட்டி கிராம சபைத்தலைவர் திரு கு தி. இராசதுரை, வலி வடக்கு காரியாதிகாரி திரு பி எஸ். பற்றிக்ஸ் உட்பட மற்றும் பல பிரமுகர்கள் மலர்மாலை அணிந்து வரவேற்பார்கள். விமானநிலைய முன்றில் பூச்சரங்களாலும், மகர தோரணங்களாலும், மாவிலைகளாலும் அலங்கரிக்கப் படும். விமான நிலையம் முழுவதும் இலங்கை இந்திய தேசிய கொடிகளால் அலங்கரிக்கப் பட்டு விழாக் கோலம் பூண்டுள்ளது.

ஜனதிபதியை வரவேற்க பலாலி கனிஷ்ட பல்கலைக் கழக பத்திரிகைத்துறை விரிவுரையாளர் திரு இரத்தினம் தலைமையில் பத்திரிகைத்துறை மாணவ, மாணவிகள் கூடியிருப்பார்கள். கலாசாலை, மாணவ மாணவர்களும் கூடியிருப்பார்கள். மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகளும் கூடி வரவேற்பார்கள்.

பாதுகாப்பு படை வீரர்களின் பாதுகாப்புடன் திரு. கிரியும் அவரதுகுழுவினரும் இராஜ மரியாதையுடன் இராஜ பவனியாக அழைத்து செல்லப்படுவார்கள்

ஜனதிபதியின் பாதுகாவலர் ஒருவர் நேற்று விசேட விமான மூலம் பலாலி விமான நிலையம் வந்து வரவேற்பு ஒழுங்குகளைப் பார்வையிட்டபின்னர் கொழும்பு சென்றுள்ளார்.

### வெள்ளநிவாரண நிதி உதவிகள்

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரி வேண்டுகோளின் பேரில் 'ஈழநாடு' மூலம் இதுவரை வெள்ள நிவாரண நிதிக்கு உதவியவர்கள் விபரம் வருமாறு:-

ஏ சங்கரன், சுபாஸ் ரூறிஸ்ற் ஹோட்டல், 100ரூபா. ஏ சோமலிங்கம், கே கே எஸ் வீதி, யாழ்ப்பாணம் 10 ரூபா. ஏ இளையதம்பி உடையார் வளவு உடும்பிராய்,10 ரூபா. வின்சென்ற் யாழ்ப்பாணம் 50 ரூபா. ஒருஅனுதாபி 10ரூபா. பி வைத்திலிங்கம், குரும்பசிட்டி. 100 ரூபா.

### விவசாயப்படை வீரரின் வேதனம்

விஸ்வமடு, ஞாயிறு
வீடுகளுக்குத் திருப்பியனுப்பிவைக்கப்பட்டுள்ள விஸ்வமடு விவசாயப் படை வீரர்களின் வேதனம் இன்று வழங்கப் படவிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. வேலைகள் ஆரம்பிக்கும் திகதி பின்னர் அறிவிக்கப்படுமென வேதனம் வழங்கப்படுவது சம்பந்தமாக தனித்தனி ஒவ்வொருவருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிறந்த அலுமினியப் பாத்திரங்களுக்கு
டைகர்
அலுமினியம்
ONE-DOLLAR

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

தேவை

மசகிடும் சேவையில் (சேர்விஸ் ஸ்ரேசனில்) அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை. நேர் முகமாகச் சமுகமளிக்கவும். லிங்கோலுப்பிறிக்கேசன் சேர்விஸ், பலாலி றேட், கோண்டாவில். 1762


## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00 இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 கத்தோலிக்கநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-30 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதம், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 சித்திரகானம், 1-00 மாதர்கேட்டவை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 சங்கமம், 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-30 சிறுவர்விருந்து.

இரவு 6-10 முத்திநெறி, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கிராமசஞ்சிகை, 7-15 சித்திரம், 7-45 வாத்திய இசை, 8-00 செய்திச்சுருக்கம், 8 03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 இசைநிகழ்ச்சி 10-30 செய்திச்சுருக்கம்.

## 'மீண்டும் இயங்க வழிசெய்க'

யாழ்ப்பாணம், ஞாயிறு

நீராவியடி சனசமூகநிலையம் கடந்த சில வாரங்களாக மூடப்பட்டுள்ளதை ஆட்சேபித்து இப்பகுதி வாலிபர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளார்கள்.

யாழ். மாநகரசபைக்கும், கிராம அபிவிருத்தி அதிகாரிக்கும் இவர்கள் இதையிட்டு ஆட்சேபனைக் கடிதங்கள் எழுதியுள்ளனர்.

இவ்வாலிபர்கள் எழுதியுள்ள கடிதத்தில், மாநகரசபைமுதல்வரையும், கிராம அபிவிருத்தி அதிகாரியை

கொழும்பு விவேகானந்தசபை

# சைவசமய பாடப்பரீட்சையில் பரிசுபெற்ற மாணவர்கள்

கோட்டை, சனி

கொழும்பு விவேகானந்த சபையால்ரா 1968ம் ஆண்டு நடாத்தப்பெற்ற அகில இலங்கைச் சைவசமய பாடப் பரீட்சையில் கீழ்க் காணும் மாணவர் வித்தியாசாலைப் பரிசில்பெற்றுள்ளாகள். (ஒவ்வொரு மாணவருக்கும் எதிரேயுள்ள இலக்கங்கள் அவ்வப் பிரிவுகளைக் குறிக்கும். 1 பாலபிரிவு-1, 2 பாலர்பிரிவு-11, 3 ஆரம்ப பிரிவு-1, 4 ஆரம்ப பிரிவு-11, 5 கீழ்ப்பிரிவு-1 6 கீழ்ப்பிரிவு-11, 7 மத்திய பிரிவு, 8 மேற்பிரிவு-1 9 மேற்பிரிவு-11

வெள்ளவத்தை சைவ மங்கையர் வித்தியாலயம்:- 5 ச ரவிச்சந்திரிகா, 7 பொ சரோஜா. 8 ந இரஜந்தி 9 சி இரமணி.

பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி:- 1சி தேவசிகாமணி, 3 சி ஜிவாஜி, 4 இ சுரேஸ்குமார். 5 இ நந்தகுமார்.

கொழும்பு இசிப்பத்தன மகாவித்தியாலம்:- 9 ந திருக்கேஷ்வரன்,

தெமட்டக்கொடை அரசினர் தமிழ் வித்தியாலயம்:- 2 ச நித்தியானந்தராசா, 3 பி பரமேஸ்வரி, 4 கா சிவதாஸன், 5 ச சுயம்புலிங்கம், 6 சே குணசேகரன்(உவந்தளிப்பு) 8 சு இராமச்சந்திரன்.

மாத்தளை பாக்கிய வித்தியாலயம்:- 5 அ சுலோசனு, 7 மா நாகேஸ்வரி, 9 வி சரஸ்வதி.

வத்துகாமம் சி சி த க பாடசாலை:-3 நா சரோஜா 4:-இ பரமேஸ்வரன்.

தெல்தெனியா தும்பறை வித்தியாலயம்:- 5 ஆ துரைராசா.

கண்டி இந்து சிரேஷ்ட பாடசாலை:- 3 சி முரளீதரன், 4 க உமாதேவி, 5 இ புஷ்பகோகிலா, 9 மு கணேசன்.

தலாத்தோயா அ த க பாடசாலை:- 3 மு புஷ்பராசா 4 மா செல்வராணி

கலகாமகாவித்தியாலயம்- 5 சிவபாக்கியம்.

நாவலப்பிட்டி கதிரேசன் கனிஷ்ட வித்தியாலயம்;- 2 கா கணபதி, (உவந்தளிப்பு) 3 வீ ஜெகதீசன், 4 சு கணேசதாஸ், 5 நா சுப்பிரமணியம், 6 ந பாலசுப்பிரமணியம்,

நாவலப்பிட்டி இந்து

கோகிலம், 7 தி தேவராணி, 9 ப கிருஷ்ணவேணி

பொகவந்தலாவ சென் மேரிஸ் பாடசாலை:- 5 க கரும்பு, 6 அ ஆறுமுகம்

பொகவந்தலாவ ஹோலிறேசனி அ த க பாடசாலை:- 4 இ அரியராமன் (உவந்தளிப்பு) 5 ப தருமராஜ் 6 இ பாலசுந்தரம்,

பூண்டுலோயா தமிழ் மகாவித்தியாலயம்:- 8 பூ சுப்புலெட்சுமி.

பதுளை தமிழ் மகளிர் கல்லூரி.- 4 வே ஆனந்தி, 5 செ செல்வராணி, 7 நா சுவாதி' 8 ந வசந்தா, 9 இ இராஜமணி, மே மீனலோசனி, சு விஜயகுமாரி

பதுளை சரஸ்வதி மகாவித்தியாலயம்:- 9 பி இளங்கோ

பதுளைசரஸ்வதி கனிட்ட வித்தியாலயம்:- 5 க சத்தியநாதன்.

இரத்தினபுரி புனிதஅலோசியஸ் கல்லூரி: 3 மு கேசவன் (உவந்தளிப்பு), 9 பெ ஞானசோதி.

எட்டியாந்தோட்டை புனித மேரி தமிழ் வித்தியாலயம்: 4 க இரத்தினஜெயம் 6 கு வேலுச்சாமி (உவந்தளிப்பு).

அக்கரைப்பற்று இ கி ச மகா வித்தியாலயம்: 5 மு மாணிக்கவாசகம், 9 சி சதானந்தம்.

காரைதீவு அ த மகாவித்தியாலயம்: 8 வே புவனேஸ்வரி.

காரைதீவு இ கி ச த ஆண்கள் பாடசாலை: 4 அ மகேந்திரன்.

காரைதீவு இ கி ச பெண்கள் பாடசாலை: 4 ந கலைராணி

கல்முனை இ கி ச வித்தியாலயம்; 3 இ சிவராணி. 4 அ கிருஷ்ணவேனி, 5 மு சுதாகரி.

பெரியகல்லாறு மகா வித்தியாலயம்: 6 தி கோமதி.

பெரியகல்லாறு அ த க பாடசாலை- 3 தி வசந்தி. 4 த திருமங்கை,

பழுகாமம்இந்துபரிபாலன சபை: 8 வே செல்வராணி,

9 க சிவகுமாரன்.

கல்லடி உப்போடை இ கி ச பெண்கள் பாடசாலை: 4 ச திலகவதி.

மட்டக்களப்பு வின்சர் மகளிர் கல்லூரி: 9 சி சுமித்திரா.

கோட்டைமுனை மகா வித்தியாலயம்: 7 க லோகநாயகி, 8 ந ரஜனி, 9 த தனலக்சுமி.

வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயம்: 6 சி விஞயகமூர்த்தி. 7 த சண்முகராசா, 8 வே லோஜினி, 9 வே ஜானகியம்மா த குணரத்தினம்.

கஞ்சிமடம் மகா வித்தியாலயம்: 3 சி விஜயலக்சுமி.

திருமலை புனித பிரான்சீஸ் சவேரியார் பாடசாலை: 4 க இந்திரா.

திருமலை இ கி ச இந்துக் கல்லூரி: 6 சி பிரபாகரன், 7 த குகதாஸ், 8 க சந்திரகாந்தன், 9 பா சிவப்பிரகாசம்.

திருமலை ஸ்ரீகோணேஸ்வர வித்தியாலயம்: 3 பா குமாரதேவன், 4 க தருமரெத்தினம், 5 க சத்தியவண்ணன்.

திருமலை ஸ்ரீ சண்முக வித்தியாலயம்: 7 ப பிரபாகரி, 8 க துளசிமணி, 9 பா சிவஞானசுந்தரி.

வவனியா சைவப்பிரகாச வித்தியாசாலை: 9 க சோதீஸ்வரி.

வவுனியா மகா வித்தியாலயம்: 8 நா தர்மராசா, 9 வ விமலாதேவி.

ஓமந்தை மகா வித்தியாலயம்: 5 நா சாந்தகுமார், 6 ந விமலநாயகி, 7 பா நிர்மலாதேவி. 8 க இந்திராதேவி, 9 க சிவதாஸன்.

முள்ளியவளை சைவ வித்தியாசாலை: 3 செ செல்லஞச்சி.

முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரி: 4 கு பாலசுப்பிரமணியம், 5 க தேவராணி, 6 சி விமலாதேவி, 7 இ கிருஷ்ணபிள்ளை, 8 கை தம்பிராசா, வே சிவரஞ்சனிதேவி, 9 இ ஜெயலட்சுமி.

புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயம்: 5 கை தேவராசா, 9 சி இராசேஸ்வரன், க. வசந்தாதேவி.

ஒட்டாஞ்சேனை விவேகானந்த மகா வித்தியாலயம்: 3 ந மகேஸ்வரி, 4 ம பொன்னம்மா, 5 சி அம்பிகா, 7 ச மாணிக்கம்.

இருக்கோயில் இருஞான வாணி முத்தமிழ் இசை மன்


இன்று மட்டும்

ராஜா (யாழ்ப்பாணம்)

தினசரி 3 காட்சிகள்

எம். ஜி. ஆர். - ஜெயலலிதா

சோ

நடித்த

காவல் காரன்


அரசாங்கம்

## கீரிமலை அபிவிருத்திக்கு ரூபா 11,000 வழங்கியுள்ளது

மாவிட்டபுரம், சனி

சைவர்களின் புண்ணிய ஸ்தலமாக விளங்கும் கீரிமலைப்பகுதியின் அபிவிருத்தி வேலைக்காக அரசாங்கம் 11,000 ரூபா வழங்கியுள்ளது. இதற்கான ஆக்கவேலைகள் துரிதமாக நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

கீரிமலையை உல்லாசப்பிரயாணிகளின் வசதியை முன்னிட்டு நவீன முறையில் அமைப்பதற்கான அபிவிருத்தி திட்டமொன்றை தெல்லிப்பழை கிராமசபை வகுத்துள்ளது.

இத்திட்டத்தின் முதல் வேலையாக உடுப்புகள் மாற்றும் அறை நவீன முறையுடன் அமைக்கப்பட்டுவருகிறது. கேணியும் திருத்தி அமைப்படும்என அபிவிருத்தி திட்டக்குழு தெரிவித்தது.

## 2,000 தொன் வெங்காயம் இப் பகுதியில் நஷ்டம்

திருக்கோணமலை, சனி

கட்டுக்குளம் பற்றுக் காரியாதிகாரி பிரிவில் அடங்கிய குச்சவெளி, புல்மோட்டை, கும்புறுபிட்டி, நிலாவெளி, கோபாலதரம், இறக்கக் கண்டி ஆகிய இடங்களில் வெங்காயச் செய்கை முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது. வெங்காயச் செய்கையில் இப்பகுதியில் இம்முறை சுமார் 2,000 தொன் அறுவடை எதிர்பார்க்கப்பட்டதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

ச. ச. நிலைய சமாஜ

## கலை, கலாச்சார போட்டி ஒத்திவைப்பு

மாவிட்டபுரம், சனி

யாழ் மாவட்ட உள்ளூராட்சி வார சனசமூக நிலைய சமாஜவிழாவை யொட்டி நடத்தப்படும் கலை-கலாச்சார போட்டிகள் இம்மாதம் 21,22ம் திகதிகளில் காரியாதிகாரி பிரிவுகளில் நடைபெறவிருக்கிறது.

சனசமூக நிலையங்களுக்கிடையில் நடத்தப்படும் இப் போட்டிகள் இம்மாதம் 14,15ம் திகதிகளில் நடைபெற ஏற்பாடாகி இருந்த போதிலும் சில சனசமூக நிலையங்களுக்கு அனுப்பப்பட்ட விண்ணப்ப பத்திரங்கள் கிடைக்கவில்லையெனத் தெரிவிக்கப்பட்டிருப்பதால் 21,22ம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளதாக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

போட்டிகள் நடைபெறும் திகதியும், நிலையங்களும் பின்வருமாறு:

21-1-70 வேலணை ம.ம. வித்தியாலயத்தில்: தீவுப் பகுதி நெடுந்தீவு காரியாதிகாரிகள்பிரிவு, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் வடமராட்சி காரியாதிகாரிகள் பிரிவு, சாவகச்சேரி டிரிபேக் கல்லூரியில் தென்மராட்சி, கிளிநொச்சி, பளை. துணுக்காய், பூநகரி காரியாதிகாரிகள் பிரிவு தெல்லிப்பழை மகாஜன கல்லூரியில் வலி-வடக்கு காரியாதிகாரி பிரிவு.

22-1-70 மானிப்பாய் மெமோரியல் கல்லூரியில்: வலி மேற்கு காரியாதிகாரி பிரிவு, யாழ் மத்திய கல்லூரியில் யாழ்ப்பாணம், வலி கிழக்கு காரியாதிகாரிகள்பிரிவு.

## ஆசிரியர் பற்றாக்குறையாம்

ஊர்காவற்றுறை, சனி

## சனசமூக நிலைய தீர்மானம்

ஊர்காவற்றுறை, சனி

சரவணை சனசமூக நிலைய மத்திய வாசிகசாலையைத் திருத்துவதற்கு சரவணை சேவாமன்றம் தீர்மானத்துள்ளது.

திரு. செ. ச. சிவம் தலைமையில் நடைபெற்ற மன்றக் கூட்டத்தில் இது பற்றிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது,

சரவணை நாகேஸ்வரி வித்தியாசாலைக்குபயிற்சிபெற்ற விசேட ஆசிரியர் ஒருவரை நியமித்துத் தரவேண்டும் என கல்விப்பகுதியினரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

## பொலிஸ் நிலையங்கள்

# செய்திச் சுருக்கம்

### நிவாரண நிதி

மாத்தறை மாவட்டத்தில் வெள்ளத்தினுல் வீடுகளை இழந்த அகதிகள் இவற்றைத் திருத்தியமைக்க அரசாங்கம் வழங்கும் நிவாரணம் ரூ. 14000 ஆக உயர்த்தப்பட வேண்டுமென்று கோரி இதுபற்றி பிரதமருக்கு பெரியதொரு மகஜரைச் சமர்ப்பித்து மாத்தளை வாசிகள் கையெழுத்திட்டு அனுப்பியுள்ளனர்.

0 0 0

### அதிருப்தி

அடம்பன் கிராமசபை நிர்வகித்து வரும் ஆயுள் வேத வைத்தியசாலைக்கு இதுவரை யானிய உதவி கிடைக்காததையிட்டுகிராமசபை அதிருப்தி தெரிவித்துள்ளது. இது சம்பந்தமாக கிராமசபைத் தலைவர் திரு. ம. சவிரி உதவி உள்ளூராட்சியாளர்களுக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். மகஜரில் ஆயுள்வேத வைத்தியசாலை 66-ம் ஆண்டில் திறக்கப்பட்டு இதுவரையும் 3 ஆயிரம் ரூபா செலவிடப்பட்டுள்ளதாகவும் இப்பணம் கிராமசபை மானியத்திலிருந்து செலவிடப்பட்டுள்ளதால் கிராமசபையின் அபிவிருத்தி முடியாதிருப்பதாகவும், வைத்தியசாலைக்கு மானிய உதவி வழங்குமாறு கேட்டுள்ளார்.

0 0 0

### சின்னம்மை

விடுமுறையின் பின் பேராதனைப் பல்கலைக் கழகம் நேற்று ஆரம்பமானதும் சின்னம்மை நோயால் பீடிக்கப்பட்ட இரு மாணவிகள் அங்கு வந்திருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. பின்னர் இருவரும் கண்டி ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டனர். சின்னம்மை நோயால் பீடிக்கப்பட்ட இரு மாணவிகளும் வடபகுதியை சேர்ந்தவர்களாவர்.

0 0 0

### இடைத்தேர்தல்

இரத்தினபுரி தொகுதி இடைத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் பெப்ரவரி 7-ம் திகதி ஏற்றுக் கொள்ளப்படுமென மகா தேசாதிபதி வர்த்தமானி மூலம் அறிவித்துள்ளார்.

இரத்தினபுரி எம். பி. திரு. தனபால அட்டிக்கலை கடந்த டிசம்பர் 3-ம் திகதி காலமானதை அடுத்தே இரத்தினபுரி தொகுதி இடைத் தேர்தல் நடைபெறுகிறது

ளுக்கு நீடிக்க சட்டம் இடமளிக்காவிடின் சட்டத்தை திருத்துமாறு இலங்கைவர்த்தகர் ஊழியர் யூனியன்பிரதிநிதிகள் தொழில் அமைச்சரிடம் தெரிவித்துள்ளனர்

0 0 0

### சமரசம்

களுத்துறை அஸோஸியேட்டட் மோட்டர் வேலை ஸ்தாபனத்தில் இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம் கடந்த 112 நாட்களாக நடாத்திவந்த வேலைநிறுத்தத்தில் சமரசம்ஏற்பட்டது லக்கி இன்டஸ்றிஸ் ஸ்தாபனத்திலும், பசளைக் கூட்டுத்தாபனத்திலும் இலங்கை வர்த்தக ஊழியர் சங்க அங்கத்தவர்கள் வேலைநிறுத்தம் செய்து வருகின்றனர்.

0 0 0

### நினைவு தினம்

அகில இலங்கை இந்து மாமன்ற தலைவராக இருந்த ஸ்ரீஸ்கந்தராசாவின் நினைவு தினத்தை இம்மாதம் 29 ம் திகதி அனுஷ்டிக்க இந்து மாமன்றம் தீர்மானித்துள்ளது. கும்பனித் தெரு ஜுபிளி மண்டபத்தில் இதனையொட்டி பொதுக் கூட்டமொன்று நடைபெறும். மன்றத்தின் தலைவர் திரு. ச சோமசுந்தரம் தலைமை வகிப்பார். செனட் சபைத் தலைவர் ஏ. இ. ரத்நாயக்கா பிஷப் குலேந்திரன் ஆகியோர் உரை நிகழ்த்துவார்.

0 0 0

### 30 லட்சம்

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவர்கள் எனக் கூறப்படும் ஒரு தம்பதியினர் கட்டுநாயக்கா விமானத் தளம்மூலமாகரூ 13,00,000 பெறுமதியான தங்கப் பாளங்களைக் கடத்த முயன்று பிடிபட்டனர். இவர்களுக்கு 30 லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது தம்பதியினர் அணிந்திருந்த ஆடையினுள் இத்தங்கப் பாளங்கள் வைத்துத் தைக்கப்பட்டிருந்தனவாம்.

0 0 0

### மா கடத்தல்

நாட்டில் கோதுமை மா தட்டுப்பாடு நிலவும் இச்சமயத்தில் கள்ளத்தனமாக கோதுமை மா கடத்திச் சென்றதாகச் சந்தேகத்தின் மீது ஒரு கோஷ்டியை அட்டன் பொலிஸார் கைது செய்துள்ளனர். கைப்பற்றப்பட்ட 47 மூடை கோதுமையும், 7 மூடை அரிசியும் அவை ஏற்றிவரப்பட்ட லொறியுடன் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ரிக்கும் இவர்கள் இதை யிட்டு ஆட்சேபனைக் கடிதங் கள் எழுதியுள்ளனர்.

இவ்வாலிபர்கள் எழுதியுள்ள கடிதத்தில், மாநகர சபைமுதல்வரையும், கிராம அபிவிருத்தி அதிகாரியையும் இச்சனசமூக நிலையத்தின் நன்மை கருதி, உடனடியாக இதில் தலையிட்டு இவ்வாசிகசாலையையும் நூல் நிலையம் மீண்டும் மக்களுக்குப் பணிசெய்யும் வகையில் புனருந்தாரணம் செய்து தரும்படி வேண்டிக்கொண்டிருக்கிறார்கள்.

நாவலப்பிட்டி கதிரேசன் கனிஷ்ட வித்தியாலயம்:- 2 கா கணபதி, (உவந்தளிப்பு) 3 வீ ஜெகதீசன், 4 சு கணேசதாஸ், 5 நா சுப்பிரமணியம், 6 ந பாலசுப்பிரமணியம்,

நாவலப்பிட்டி இந்து வாலிப சங்கம்:- 7 த மோகனசந்திரபோஸ், 8 க நடராசா, 9 வே உமாச்சந்திரன்.

நாவலப்பிட்டிபரியந்திரேய மகளிர்மகாவித்தியாலயம்:- 9 சு சரேசினி,

ஹட்டன் புனிதகபிறியல் பெண்கள் கல்லூரி:- 6 செ


ராணி (யாழ்ப்பாணம்) [தினசரி 4 காட்சிகள்]

எம். ஜி. ஆர். - ஜெயலலிதா அசோகன் - சோ - சந்திரபாபு நடித்த

அடிமைப்பெண்

6வது வெற்றி வாரம்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி. பிரிபோயா, போயா 4 காட்சிகள்

கிங்ஸ்லி [கொழும்பு] பிளாஸா [வெள்ளவத்தை]

ஏ. பி நாகராஜனின் தயாரிப்பில் உருவான மற்றுமோர் வெற்றிச்சித்திரம்



★ சிவாஜி ★ பத்மினி
★ஜெமினி ★ சாவித்திரி
★ முத்துராமன் ★ கே. ஆர். விஜயா
★ நாகேஷ் ★ மனோரமா

நடித்த

திருவருட் செல்வர்

[ஈஸ்ட்மென் கலர்]

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா சோ
நடித்த
காவல் காரன்

வெலிங்டன் சினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30 மணி
சுந்தரராஜன்-நாகேஷ் நடித்த
ஆலயம்

வல்வெட்டித்துறை
ரஞ்சனா தியேட்டர்
தினசரி: 6-30, 9-30
சிவாஜி — எம் ஜி ஆர். நடித்த
கூண்டுக்கிளி
4-30க்கு மட்டும்
SWEET NIGHTS

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 630 930
பிறிப்போயா, போயா 2-30 மணி
காந்தாராவ்-ராஜ்ஸ்ரீ நடித்த
வீரபாண்டியன்

REGAL JAFFNA
Daily 4-45, 7 & 9-45, p.m
Shashi Kapoor, Heyley Mills
in
A MATTER OF INNOCENCE
(Pauavision)

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m
David Janssen
in
WARNING SHOT
(Technicolor)
Acrisp, Crime Detective, Thriller


ராசா, 9 சி இராசேஸ்வரன், க. வசந்தாதேவி.

வெட்டாஞ்சேனை விவேகானந்த மகா வித்தியாலயம்: 3 ந மகேஸ்வரி, 4 ம பொன்னம்மா, 5 சி அம்பிகா, 7 ச மாணிக்கம்.

திருக்கோயில் திருஞானவாணி முத்தமிழ் இசை மன்றம்: 9 தி. தில்லையம்மா,

இராமநாதபுரம் வடக்கு மகா வித்தியாலயம்: 9 ந ஆனந்தநாயகி.

பரந்தன் இந்து த க பாடசாலை: 2 க கமலேஸ்வரி.

பளை மகா வித்தியாலயம்: 5 ஜே செல்வநாயகம், 9 இ சுகுமாரன்.

கொடிகாமம் அரசினர் வித்தியாலயம்: 3 வ மார்க்கண்டு.

மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்: 2. கு கல்யாணி, 3. ஐ கதிர்காமசேகரம் 4 ச விமலநாதன், 5. க. ஜெயகுமார், 6 செ நாகேந்திரம்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி: 3 அ சுரேஷ், 3 கோ. திருமகள், 5 அ இராமேஸ், 6 க செல்வநாதன், 7 ரா. ஜெயரத்தினம்.

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி: 7 சு ரேணுகா, 9 இ கணேசமூர்த்தி

மட்டுவில் வடக்கு சந்திரபுரஸ்கந்தவரோதயக் கல்லூரி: 9 சி இந்திராகாந்தி.

கைதடி விக்னேஸ்வர வித்தியாசாலை: 9 வி தனலட்சுமி.

கட்டைவேலி ஞானசாரியக் கல்லூரி: 3 சி தயாபரன், 5 மு மாலதி, 6 சு. சாரதாமணி, 8 செ சிவஞானம்.

கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாசாலை: 2 செ. குலவீரசிங்கம்.

நெல்லியடி மெ மி பாடசாலை: 3 சு சுதாகர்.

வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரி: 4 த யோகலிங்கம், 5 க செல்வராணி, 6 கி. விக்னேஸ்வரன், 8 சு. செல்வநாதன். வை நவரத்தினம், 9 கா தங்கராசா.

புலோலி மெ மி பாடசாலை: 2 சு ஆனந்தசிவம்.

மத்திய மகா வித்தியாலயத்தில் வடமராட்சி காரியாதிகாரிகள் பிரிவு, சாவகச்சேரி டிரிபேக் கல்லூரியில் தென்

## ஆசிரியர் பற்றுக்குறையாம்

ஊர்காவற்றுறை ஸ்ரீ சரவணை நாகேஸ்வரி வித்தியாசாலையில் ஆசிரியர் பற்றுக்குறை ஏற்பட்டுள்ளது. மூன்று ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டிய நிலையில் பாடசாலை இருப்பதாக தலைமையாசிரியர் தெரிவித்தார்.

## புதுவீதி அமைக்கப்படும்

திருக்கோணமலை, சனி

கிண்ணியாவிலிருந்து மூதூருக்குக் குறுகிய தூர வீதி ஒன்றினை அரசாங்கம் அமைக்கத் திட்டமிட்டுள்ளது. இவ்வீதிக்கெனப் பொதுப்பணித்துறை அமைச்சு ஆறு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவை ஒதுக்கியுள்ளது இவ்வீதி கிண்ணியாவிலிருந்து ஆலங்கேணியூடாக பச்சலூர் வரை வந்து மூதூர் பிரதான வீதியைச் சேரும். இவ்வீதியினால் மூன்று ஆறுகளைக் கடக்கும் சிரமம் நீக்கப்படும் என்று மூதூர் முதல் எம். பி. ஜனாப். எம். ஈ. எச். முகம்மது அலி கூறினார்.

3 ஏ விஜயகராசா, 4 வீ. சுந்தரலிங்கம், 5 இ சிவபாதசுந்தரம்.

புற்றளை மகா வித்தியாலயம்: 1 மு மணிசேகரன், ந ஜெயகநாதன் 3. சி யோகராணி, 4 க நக்கீரன், 5 க வித்தியானந்தன்.

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி: 3 இ கீதா, 4. க பிரேமாவதி, 5 ந. இந்துமதி, 6 பா பாலேஸ்வரி, 8 ச விஜயலட்சுமி, 9 ச. வள்ளியம்மைபிள்ளை.

தும்பளைச் சிவப்பிரகாச வித்தியாசாலை: 4 து சிவராசா, க பானுமதி, 5 வி. விஜயகுமார். 9 வத்சலா.

(மிகுதி நாளை வரும்)

சரவணை நாகேஸ்வரி வித்தியாசாலைக்குபயிற்சிபெற்ற விசேட ஆசிரியர் ஒருவரை நியமித்துத் தரவேண்டும் என கல்விப்பகுதியினரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

## பொலிஸ் நிலையங்கள் அமைக்க முயற்சி

முசலி, சனி

மன்னார் மாவட்டத்தில் பொலிஸ் நிலையங்கள் குறைவாயிருப்பதால் குற்றத்தடுப்பு வேலைகளை சில பகுதிகளில் காரியாதிகாரிகளே பார்க்க வேண்டியுள்ளது.

முருங்கன் அடம்பன் ஆகிய இடங்களில் பொலிஸ் நிலையங்கள் அமைக்கமுசலி மாந்தைக்காரியாதிகளான திருவாளர்கள் வை. சொக்கலிங்கமும், முத்தையா சுப்பிரமணியமும் முயற்சி எடுத்து வருகின்றார்கள்.

## ஆயுள்வேத சக்கரவர்த்தி மரணமானர்

கோட்டை, சனி

ஆயுள்வேத சக்கரவர்த்தி ஆயுள்வேத சிரோமணி டாக்டர் குணசேகரா ஒவித்திகல நேற்றுமுன் தினம் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் காலமானார்.

68 வயது நிரம்பிய டாக்டர் ஒவித்திகல ஆயுள்வேத வைத்தியத்தை முன்னேற்றுவதில் அரும்பாடுபட்டு உழைத்தவர். ஆயுள்வேத வைத்திய சபாவின் தலைவராகவும் சில காலம் இவர் பதவிவகித்தார்.

## சுடப்பட்டார்

லண்டன், ஜன. 10

பனமா விமானம் ஒன்றை துப்பாக்கிமுனையில் திசை திருப்பி கியூபாவுக்குக் கொண்டுபோக முயன்ற ஒருவர் சுட்டுக் கொல்லப் பட்டார்.


வெளிவந்துவிட்டன!

G. C. E. (O. L.) மாணவர்க்கு ஒரு வரப்பிரசாதம் ஆசிரியர்க்கும் ஓர் அரிய கைநூல்

மீட்டல் வழிகாட்டித் தொடரில்

தூய கணிதம் I (ரூ. 3-50)

தூய கணிதம் II (ரூ. 3-00)

- புதிய முறையிற் கையாளப்பட்ட எடுத்துக் காட்டுகள்.
- கடந்த 25 ஆண்டுகளின் பரீட்சை வினக்கள்—தனித்தனி அலகுகளின் கீழ் தரப்பட்டுள்ளன.
- திரு. சு. இராஜநாயகம் B. A. (London) அவர்கள் பல்லாண்டு தூயகணிதம் கற்பித்த அனுபவத்தின் பெறுபேற்றினை திரு அ. விசுவநாதன் B. A. அவர்கள் நூலாகத் தொகுத்துள்ளார்.

ஸ்ரீலங்கா வெளியீடு

234, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.


ரவரி 7-ம் திகதி ஏற்றுக்கொள்ளப்படுமென மகா தேசாதிபதி வர்த்தமானி மூலம் அறிவித்துள்ளார்.

இரத்தினபுரி எம். பி. திரு. நனபால அட்டிக்கலை கடந்த டிசம்பர் 3-ம் திகதி காலமானதை அடுத்தே இரத்தினபுரி தொகுதி இடைத் தேர்தல் நடைபெறுகிறது

0 0 0

## விலைகுறைந்தது

கண்டி மாவட்டத்தில் கராம்பின் விலை வெகுவாக குறைந்துள்ளது. சில நாட்களுக்கு முன்னர் ஒரு றாத்தல் கராம்பின் விலை 40 ரூபா வரையில் இருந்தது. ஆனால் இப்பொழுது ஒரு இருத்தல் கராம்பு 10 ரூபாவாக குறைந்துள்ளது.

0 0 0

## தற்கொலை

இரத்தினபுரி பொலிஸ் பகுதியை சேர்ந்த காஹேன் கடையைச்சேர்ந்த இளைஞர் நச்சுத்திராவகமருந்தி தற்கொலை செய்து கொண்டார். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லும் வழியில் அவர் மரணமானர். மரணவிசாரணை அதிகாரி திரு. எம். ஜி பூஞ்சிமாத்மயா விசாரணையின் பின் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

0 0 0

## விவசாய கடன்

மன்னார் பகுதி விவசாயிகளுக்கு இவ்வருடம் பெரும்போக விவசாயக்கடனாக 46 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது இந்தக்கடன் மாவட்டத்திலுள்ள 59 பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள் மூலம் 3844 விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

0 0 0

## சட்டம்

இலங்கைவர்த்தக ஊழியர் யூனியனுக்கும், இலங்கை முதலாளிமார் சம்மேளனத்துக்குமிடையேயுள்ள கூட்டு ஒப்பந்தத்தை சம்மேளனத்தில் அங்கத்தினர் அல்லாத ஸ்தாபனங்க

சட்டுப்பாடு நிலவும் இச் சமயத்தில் கள்ளத்தனமாக கோதுமை மா கடத்திச் சென்றதாகச் சந்தேகத்தின் மீது ஒரு கோஷ்டியை அட்டன் பொலிஸார் கைது செய்துள்ளனர். கைப்பற்றப்பட்ட 47 மூடை கோதுமையும், 7 மூடை அரிசியும் அவை ஏற்றிவரப்பட்ட லொறியுடன் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

0 0 0

## 0 ஆயிரம் நிவாரணம்

அக்கரைப்பற்று 2ம் குறிச்சி கூட்டுறவுச் சங்கம், இந்தப் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரிசி. மா மற்றும் உப உணவுப் பொருட்களை நிவாரணமாக வழங்கியுள்ளது. இதற்கென மேற்படி சங்கம் தனது நிதியிலிருந்து 10 ஆயிரம் ரூபா ஒதுக்கியுள்ளது.

0 0 0

## பதுளை மேயர்

பதுளை மாநகரசபையின் மேயராக ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த திரு. டியுடர் விஜயசேகர தெரிவு செய்யப்பட்டார். உதவி மேயராக ஜனாப் ஏ. எம். அப்துல்லா சாஹிப் தெரிவானர், திரு. விஜயசேகராவுக்கு 9 வாக்குகளும், அவரை எதிர்த்துப் போட்டியிட்ட திரு. தயா குணசேகராவுக்கு (சுதந்திரக்கட்சி) 6 வாக்குகளும் கிடைத்தன.

0 0 0

## வாலிபர் கொலை

நிவித்திகலை பொலிஸ் பகுதியைச் சேர்ந்த கெட்டனிகேவத்த என்னுமிடத்தில் 24 வயது வாலிபர் தாக்கப்பட்டு இரத்த வெள்ளத்தில் வீழ்ந்து இறந்திருக்கக் காணப்பட்டார். பழைய தகராறென்றின் காரணமாக ஏற்பட்டதாகக் கருதப்படும் இக்கொலை, காலஞ்சென்றவர் இரவு கடைக்குச் சென்று திரும்பும்பொழுதே இச்செயல் நடைபெற்றுள்ளதாம்.

0 0 0

## சம்பளம்

அட்டாளைச்சேனை முஸ்லிம் ஆசிரிய கலாசாலை ஆசிரிய மாணவர்களினதும் வெளியேறிய ஆசிரியர்களினதும் டிசம்பர் மாதச் சம்பளம் இதுவரை கிடைக்கவில்லை, அக்கரைப்பற்று மக்கள் வங்கியில் சம்பளக்காசோலைகள் தயாரிப்பதில் ஏற்பட்டுள்ள தாமதத்தினால் டிசம்பர் மாத வேதனம் இம்மாத முற்பகுதியில் கிடைக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.


வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

யாழ். வின்ஸர் திரையில்

தினசரி 4 காட்சிகள்

★ சிவாஜிகணேசன் ★ சரோஜாதேவி
★ நாகேஷ் ★ விஜயலலிதா ★ மனோரமா

மற்றும்பலர் நடித்த

அஞ்சல்பெட்டி 520


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரான்ஸ் 50 சண்டை விமானங்களை லிபியாவுக்கு விற்கும்

## அரபுக்களின் கைஓங்குமென இஸ்ரேல் கவலை

பாரிஸ், ஜனவரி 10

**வட ஆபிரிக்க அரபு நாடான லிபியாவுக்கு 50 மிராஜ் சண்டை விமானங்கள் விற்பதற்கு பிரான்ஸ் இணங்கியிருக்கின்றது.**

**இந்த நாட்டுக்கு பிரான்ஸ் ராணுவ உதவிகள் வழங்குவதை இஸ்ரேல் கடுமையாக ஆட்சேபித்திருக்கின்றது. லிபியாவுக்கு வழங்கப்படும் ஆயுதங்கள் வேறு நாடுகளுக்கு மாறிவிடுமென்று இஸ்ரேல் தெரிவித்திருக்கின்றது.**

லிபியா, பிரெஞ்சு ஆயுதங்கள் பெறுவது சம்பந்தமாக கடந்த சில தினங்களாகவே லிபியா வர்த்தகக் குழுவொன்று பாரிஸில் பேச்சு வார்த்தைகள் நடத்திவந்தது

லிபியா 1967-ம் ஆண்டு இஸ்ரேல்-அரபு யுத்தத்தில் சம்பந்தப்பட்ட வில்லை என்று பிரான்ஸ் திருப்தியடைந்திருப்பதாகவும் அதனால் அந்த நாட்டுக்கு ராணுவ உதவிகள் வழங்கத் தீர்மானித்திருப்பதாகவும் செய்திகள் கூறின.

லிபியாவுக்கு 50 மிராஜ் சண்டை விமானங்களை வழங்குவதற்கு இப்பொழுது பிரான்ஸ் முடிவுசெய்திருக்கின்றது. இது லிபியாவின் தற்பாதுகாப்புக்கு மட்டுமே உபயோகிக்கப்படும். வேறு கைகளுக்குப்போய்ச்சேரக் கூடாதென்று பிரான்ஸ் உத்தரவாதம் பெற்றிருக்கின்றது

ஆனால் இஸ்ரேல் பாதுகாப்பமைச்சர் திரு. தயான் இந்த விமானங்கள் வேறு நாடுகளுக்குப்போய்ச்சேரும் என்று வலியுறுத்திக்கூறியிருக்கிறார். 'இது எனக்கும் தெரியும், பிரான்ஸுக்கும் தெரியும், உலகில் யாவருக்கும் தெரிந்த விஷயம்தான்' என்று அவர் டெல் அவிவில் கூறினார்.

இஸ்ரேலுக்கு ஆயுதம் வழங்குவதில் பிரான்ஸ் பெருமைப்படக்கூடிய நாள் ஒன்று வரவே செய்யுமென்றார் திரு. தயான்.

இஸ்ரேலுக்கு விற்பனை செய்யப்படவிருந்த விமானங்களே இப்பொழுது லிபியாவுக்கு விற்கப்படுவதாகக் கூறப்படுகின்றது. இஸ்ரேலிடம் பணம் பெற்றுக்கொண்ட பின்னரும் விமானங்களை விற்க பிரான்ஸ் மறுத்துவிட்டதாம். 1967-ம் ஆண்டு அரபு-இஸ்ரேலிய யுத்தத்திற்குப் பின்னர் இஸ்ரேலுக்கு ராணுவ உதவிகள் வழங்குவதை பிரான்ஸ் நிறுத்திக்கொண்டது. சண்டையில் ஈடுபட்ட மற்ற அரபு நாடுகளுக்கும் அது ஆயுதங்கள் கொடுக்கவில்லை.

லிபியாவுக்கு விற்க ஒப்பந்தமாகியிருக்கும் 50 விமானங்களில் பிரான்ஸ் அடுத்த ஆண்டில் 15 விமானங்களை லிபியாவுக்குக்கொடுக்கும். எஞ்சியவை காலப்போக்கில் அனுப்பிவைக்கப்படும்.

## 5 மாதங்களில் 200 தாக்குதல்கள்

### ஜோர்டான் புகார்

கடந்த ஐந்து மாதங்களில் இஸ்ரேல் ஜோர்டான் மீது 200 தடவைகள் தாக்குதல் மேற்கொண்டதாக ஐ. நா பாதுகாப்புச்சபையில் ஜோர்டான் புகார் செய்திருக்கின்றது. இந்தத் தாக்குதலில் சிப்பாய்களும் பொதுமக்களும் உட்பட 70 பேர் வரை கொல்லப்பட்டதாகவும் ஜோர்டான் புகார் கூறியிருக்கின்றது.

லெபனுனும் பாதுகாப்புச் சபையில் புகார் கூறியிருக்கின்றது கடந்த இரண்டு நாட்களாக லெபனுனின் தென் பகுதியில் இஸ்ரேலியர் மேற்கொண்டு வரும் தாக்குதல்கள் பற்றி லெபனுன் பாதுகாப்பு சபையில் புகார் செய்திருக்கின்றது.

நேற்று இஸ்ரேலியர் மற்கொண்ட தாக்குதலில் 6 லெபனுன் பொதுமக்கள் காயமடைந்ததாகக் கூறப்பட்டது.

### மே. வங்காளத்தில் ராணுவமா

கல்கத்தா, ஜன. 10

மேற்குவங்காளத்தில் கலிபோங்நகரில் கலவரங்கள் ஏற்பட்டதைத் தொடர்ந்து ராணுவம் அழைக்கப்பட்டது.

இரு கோஷ்டிகளுக்கிடையில் ஏற்பட்ட கலவரத்தில் ஒருவர் கொல்லப்பட்டார், இதைத் தொடர்ந்து இரு தரப்பினருக்குமிடையில் கடுமையான போராட்டம் ஆரம்பித்தது. இதனால் குழப்பத்தை அடக்க ராணுவம் அழைக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே சிலிகுலி என்ற இடத்தில் ஏற்பட்ட கலவரங்களில் இருவர்கொல்லப்பட்டனர்.

### மகாதேசாதிபதியின் நேபாள விஜயம்

காட்மண்டு, ஜன, 10

நேபாள இளவரசர் பிரேந்திராவின் திருமண வைபவத்தில் கலந்து கொள்வதற்காக மகாதேசாதிபதி திரு. வில்லியம் கோபல்லாவ வருகிற மாதம் நேபாளம்செல்லவிருக்கிறார். இலங்கையின் பிரதிநிதியாகக் கலந்து கொள்ளுமாறு நோபாள அரசாங்கம் விடுத்த அழைப்பிதழை ஏற்றுக்கொண்டு இவர் அங்கு செல்கிறார்.

இளவரசர் பிரேந்திராவின் திருமண வைபவம் இவ்வாண்டு மிகப் பெரிய சமூக கலாச்சார நிகழ்ச்சியாக சர்வதேச கவனத்தை ஈர்த்துள்ளது. இவ்வைபவத்தில் 45 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

### தாயகம் திரும்பியதும் தண்டனை

லண்டன், ஜன. 10

[...]யாவில் பிறந்து பிரிட்டனில் வாழ்ந்துவந்த ஒருவர் மாஸ்கோவில் பிரிட்டிஷ் பொருட்கள்விற்பனைக்காகச் [...] செய்யப்பட்டு [...] டு [...]றைத்தண்டனை விதிக்[...]

## செனட்டர் கென்னடிக்கு 'கண்டம்' நீங்கிற்று?

எக்கார்டவுன், ஜன, 10

அழகி மேரி ஜோகோமகன் மரணம் சம்பந்தமாக செனட்டர் எட்வார்ட் கென்னடி மீது குற்றஞ் சாட்டி வழக்குத் தொடரப்படலாம் என்று பொதுவாகக்கருதப்பட்ட போதிலும், அரசியல் துறையில் அவருக்கு ஏற்பட விருந்த ''கண்டம்'' தப்பி விட்டதாகக் கருதப்படுகின்றன,

செனட்டர் கென்னடியின் காரின் பின் ஆசனத்தில் பிரயாணம் செய்த அவரது காரியதரிசியான அழகி மேரி கோ கார் ஏரியில்விழுந்து மூழ்கி மரணமானது குறித்து கடந்தவாரம் இரகசியமாக விசாரணை நடைபெற்றது இந்த விசாரணையின் பின் ஏற்பட்டுள்ள அரசியல் சூழ்நிலைகள் செனட்டர் கென்னடி மீண்டும் பதவிக்கு தெரிவு செய்யப்படுவது பாதிக்கப் பட மாட்டாது என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றன.

செல்வி மேரி ஜோவின் மரணத்தில் செனட்டர் கென்னடிக்கு சம்பந்தமாக வழககொன்றைத் தாக்கல் செய்ய அழகி ஜோவின் பெற்றூர் ஆலோசித்து வருவதாகத் தெரிகின்றது.

## ''முசலி, மாந்தைப்பிரிவுகளில் சாராயத்தவறணை வேண்டும்''

### மன்னார் எம். பி. வேண்டுகோள்

முசலி சனி

மன்னார் மாவட்டத்தை சேர்ந்த முசலி மாந்தை ஆகிய காரியாதிகாரி பிரிவுகளில் சாராயத் தவறணை இல்லாதகாரணத்தால் இப்பகுதிகளில் கசிப்பு உற்பத்தி பெருகி வருவதாயும் இதனை தடுக்க மாந்தை, முசலிக் காரியாதிகாரி பிரிவுகளில் உள்ள பிரதான இடங்களில் சாராயத் தவறணைகள் ஏற்படுத்த வேண்டுமென்றும் மன்னார் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு, வி. ஏ. அழகக்கோன் மன்னார் மாவட்ட இணைப்புக்குழுக் கூட்டத்தில் கேட்டுக்கொண்டார். இலுப்பைக்கடவை கிராம சபைத் தலைவர் வி, கயிலாயபிள்ளை இப் பிரேரணையை ஆமோதித்தார். மன்னார் அரசாங்க அதிபர் திரு எஸ். கதிர்காமநாதன் தலைமையில் கூட்டம் நடந்தது.

## 'பஸ்சேவையை மாற்றியமைக்கவும்'

வேலணை சனி

குடிமனையற்ற தரவை வெளியூடாக நடைபெறும் பஸ்சேவையைக் குடிமனை உள்ள பகுதிகளான மண்கும்பான் செட்டிபுலம் ஊடாக வங்களாவடிவரை வந்து செல்லக்கூடிய விதத்தில் இ. போ. ச. பஸ் சேவையை நடத்துமாறு இ போ ச வடபிராந்திய முகாமையாளரை [...]நவதென திரு அரசரத்[...]னம் தலைமையில் கூடிய வேலணை கலைமகள் சனசமூக நிலைய நிர்வாகசபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அல்லைப்பிட்டிச் [...]தியிலிருந்து ஆராலிச் சந்திவரை[...] கும்பான் செட்டி புலம் வேலணைஊடாக பஸ் சேவையை நடத்துவதால் இப்பகுதிப்பிரயாணிகளுக்கு வசதியாக அமைவதுடன் பாடசாலை செல்லும் மாணவர்களுக்கும் வசதியாக அமையுமென தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டது.

மழைகாலத்தில் நீர் ஓடுவதற்கு வசதியாக பெருங்குளத்திலிருந்து நவக்கைக்குளம் வரையுள்ள வாய்க்காலை ஆழமாக்கித் திருத்துமாறும் பல ஆண்டுகளாக கவனிக்கப்படாமலிருக்கும் பிரதான வீதிகளைச் செப்பனிடும்படியும் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு[...]

## தமிழ்நாட்டுக்குஇந்திரா அரசு சலுகைகள் அளிக்கிறதாம்

### நிஜலிங்கப்பா குற்றச்சாட்டு

பெங்களூர், ஜன: 10

இந்திராகாந்தியை ஆதரிப்பதனால் தமிழ்நாடு அரசுக்கு இந்திய அரசாங்கம் சலுகைகள் அளிப்பதாகவும் ஆதரிக்காத ராஜ்ய அரசுகளுக்கு தேவையிருந்தும் உதவிகள் வழங்கவில்லையென்றும் திரு. நிஜலிங்கப்பா குற்றஞ் சாட்டியிருக்கிறார்.

கூட்டணி ஏற்படுத்த அல்லது உடன்பாடுகாண மற்ற எந்தக்கட்சியுடனும் தான் பேச்சு நடத்தவில்லை என்று பழைய காங்கிரஸ் தலைவர்நிஜலிங்கப்பா தெளிவாக்கினர். தன் சகாக்களில் யாரும் அவ்வாறு செய்வதாக நினைக்கவில்லை என்றார்.

மரியாதை தெரிவிக்கும் வகையில் தன்னை ஆந்திர முதல்வர் பிரம்மானந்த ரெட்டி சந்தித்ததுபோல மற்றக் கட்சிகளில் உள்ள ''நண்பர்களை'' தன் சகாக்களில் சிலர் சந்தித்தால் அது வேறு விஷயம் என்று அவர் கூறினர்.

தன் கட்சிக்கும், மற்றக் கட்சிகளுக்கும் இடையே முறையான உடன்பாடு இல்லாமலேயே இந்திரா காந்தி அரசு கவிழ்க்கப்படலாம் என்று நிருபர்களிடம் அவர் கூறினர்.

அரசு குறித்து மேலும் மேலும் மக்கள் அதிருப்தியடைவதால் மத்திய அரசு கவிழும் வாய்ப்பு இப்போது பிரகாசமாக இருப்பதாக அவர் கருதினர்.

இந்திரா அரசைக்கவிழ்க்க இடது கம்யூனிஸ்டு உதவியைக்கூட அசட்டைசெய்ய மாட்டேன். என தேசாய் கூறியதுபற்றி ஒரு நிருபர் கேட்டபோது, பழைய காங்கிரசின் கொள்கைகள், திட்டங்களை எக்கட்சியாவது ஏற்ருல் அதனுடன் ஒத்துழைப்பு இருக்கமுடியும் என தான் கருதுவதாக நிஜலிங்கப்பா கூறினர். ஆனல் எதைப்பற்றியும் நாம் இப்பொழுது திட்டவட்டமாகக் கூறமுடியாது. எல்லாம் சிந்தனைக் கட்டத்தில் உள்ளன என்ருர்.

ஆட்சேபகரமானது எதையும் செய்யாதபோதிலும் ஸ்திரமான திறமையான மைசூர், உ. பி. குஜராத் அரசுகளை சீர்குலைக்க இந்திராகாந்தி முயற்சிப்பதாக அவர் குற்றஞ்சாட்டினர். அவை பிரதமர் முகாமில் இல்லை என்பதற்காக அவற்றைக் கவிழ்க்க அந்த முகாம் தீவிரமாக முயற்சிக்கிறது என்ருர்.

மற்றவழியிலும் இந்த அரககள் மீது மத்திய அரசு பழிவாங்கும் என நினைக்கிறீர்களா? என்று கேட்டதற்கு அது சாத்யம் என அவர் பதிலளித்தார், இந்திராவை ஆதரிப்பதால், தமிழ்நாடு, ராஜஸ்தான் அரசுகளுக்கு மத்திய அரசு கணிசமான வறட்சி நிவாரண உதவி அளித்துள்ள போது தேவையிருந்த போதிலும் இந்திராவை ஆதரிக்காத 3 அரசுகளுக்குப் பணம் அளிக்கப்படவில்லை என்ருர் பீகாரில் பழைய காங்கிரசை கட்சி ஆதரிப்பதால் அங்கு காங்கிரஸ் அரசை பிரதமர் விரும்பவில்லை என்றும் அவர் சொன்னர். இவ்வாறு அரசாங்கம் நடத்தக் கூடாது: தான் மக்கள்அரசுக்கு தலைவி என்பதை பிரதமர் மறக்கிருர் என்ருர்.

ராணி ஈ போன்ற ஒரு நபரைச் சுற்றி ஒரு கோஷ்டி இயங்குகிறது. அதிலிருந்து பிரதமரை நீக்கிஎன்ன நடக்கிறது என்பதைப்பாருங்கள் என்று நிஜலிங்கப்பா சவால் விட்டார்.

காங்கிரசிலிருந்து இந்திராநீக்கப்பட்டபிறகு நடந்ததெல்லாம் ஒருபெரிய தமாஷ் என தான் நினைப்பதாக அவர் சொன்னர்.

யாழ். அரசாங்க செயலகத்தில்

## சனசமூக நிலையங்களின் விஸ்தரிப்புக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

இங்குள்ள சனசமூக நிலையங்களுக்குப் புத்துயிர் கொடுக்கும் நோச்கமாக உள்ளூராட்சி அமைச்சரால் நியமிக்கப்பட்ட சனசமூக நிலைய விஸ்தரிப்பு ஆலோசனைக்குழுவின் கூட்[...] வோல்டன், முகாந்திரம் இ. பொ. இராசையா கே. பேரம்பலம், விவசாயமன்னன் எஸ். நல்லதம்பி, திருமதிகள் பேர்ஸி அத்தனுசியார், ஞானமணி செல்லையா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# தலைமறைவு நாகர்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேர் வரை கொல்லப்பட்டதாகவும் ஜோர்டான் புகார் கூறியிருக்கின்றது.

லெபனுனும் பாதுகாப்புச் … கொண்ட தாக்குதலில் 6 லெபனுன் பொதுமக்கள் காயமடைந்ததாகக் கூறப்பட்டது.

… காலப்போக்கில் அனுப்பிவைக்கப்படும்.

# தலைமறைவு நாகர்களுக்கு வடவியட்னுமில் பயிற்சி? இந்திய அரசு கவலை

புதுடில்லி, ஜன 10

வடவியட்னுமில் தலைமறைவு நாகர்களுக்கு கொரில்லாப் பயிற்சி அளிக்கப்படுவதாகக் கூறப்படுவது பற்றி இந்திய அரசு ஆராய்ந்துவருகிறது. இந்தியா பற்றி வடவியட்னுமில் துண்டுப்பிரசுரங்கள் வெளியிடப்பட்டிருப்பது குறித்தும் இந்திய அரசு ஆராய்ந்துவருகிறது. இந்த விஷயங்கள்பற்றி இந்திய அரசு வடவியட்னும் தூதரிடம் புகார் தெரிவித்திருக்கின்றது.

வடவியட்னுமில் ஹேனுய் நகரில் உள்ள பிரசுர நிலையமொன்று இந்தியாவை தாக்கி ஒரு துண்டுப் பிரசுரத்தை வெலியிட்டுள்ளது. இது குறித்து ஆட்சிமன்ற உறுப்பினர்கள் பலர் வெளிவிவகார மந்திரி தினேஷ்சிங்குக்கு ஆட்சேபம் தெரிவித்து கடிதம் எழுதியுள்ளனர்.

வடவியட்னுமுடன் நேசபூர்வஉறவு உள்ளதாக இந்திய அரசு கூறிக்கொள்கிறது. ஆகவே இது பற்றி அரசு விசாரிக்கவேண்டுமென்று அவர்கள் கோரியுள்ளனர்

ஹனுேயில் வெளிநாட்டு மொழிகளில் பிரசுரங்கள் வெளியிடும் பிரசுராலயம் 'அமெரிக்க ஏகாதிபத்தியம்' என்ற தலைப்பில் அந்த பிரசுரத்தை வெளியிட்டுள்ளது அப்பிரசுரத்திலேயே இந்தியாவை தாக்கி எழுதப்பட்டுள்ளது. வெளியிடப்பட்ட வருஷம் 1967 என்று அதில் கூறப்பட்டுள்ளதாம்.

இந்தியாவில் காங்கிரஸ் ஆட்சி அமெரிக்க குண்டர்களை ஆதரிக்கிறது. வடவியட்னுமுக்கு எதிராக சைகோன் பொம்மை அரசின் இந்த பிற்போக்குக் காங்கிரஸ்அரசின்மீது ஆதரவாளர்கள் காங்கிரஸ் அரசு மீது மக்கள் வெறுப்படைந்து விட்டதற்கான அறிகுறிகளை ஏற்கனவே காண்பித்து விட்டனர்.

இந்தியாவில் சில பகுதிகளில் வியட்னுமில் வெற்றியளித்துள்ள முறைகளுக்கு ஆதரவு உள்ளன. அப்பகுகளில் விடுதலைக்கான தாக்குதல்கள் ஆரம்பமாகிவிட்டன. காஷ்மீரில் பிற்போக்கு இந்திய ராணுவ படையினுல் மக்கள் நீண்டகாலமாக ஒடுக்கப்பட்டுள்ளனர். மேற்கு வங்காளத்தில் ஆயுத புரட்சி ஆரம்பமாகிவிட்டது. இவ்வாறு அந்த துண்டுப்பிரசுரத்தில்எழுதப்பட்டுள்ளது.

திபேத், சிக்கிம், பூடான் மக்களும் இந்தியாவுக்கு எதிராக் போர்க்கோலம் பூண்டுள்ளதாகவும், நாகாலாந்து, மிஜோ, மணிப்பூர் பகுதிகளில் தேசபற்று மிக்க சக்திகள் விடுதலைக்கான தாக்குதலை நடத்துவதாகவும் அது மேலும் தெரிவிக்கிறது.

## சீனத்தலைவர்களை ரஷ்யா திருப்பித் தாக்குகிறது

மாஸ்கோ, ஜன. 10

சீனத் தலைவர்களை மீண்டும் சோவியத் அரசாங்கம் கடுமையாகக் கண்டித்திருக்கின்றது.

சமீப காலத்தில் சீனுமீது ரஷ்யா விடுத்த மிகக் கடுமையான கண்டனக்கணையென்று இதை அவதானிகள் கருதுகின்றனர்.

சீனமக்கள் மத்தியில் யுத்த பீதியைக் கிளப்பி விளப்பி விடுவதாக ரஷ்யர்கள் சீனத் தலைவர்களைக் கண்டித்துள்ளனர்.

அண்மையில் சீனர்கள் சோவியத் தலைவர்களை மோசமாகக் கண்டித்ததற்கு பதில் நடவடிக்கையாக இப்பொழுது சோவியத் யூனியன் திருப்பித்தாக்க ஆரம்பித்திருப்பதாகக் கருதப்படுகின்றது.

சீன-சோவியத் எல்லைப் பேச்சுக்கள் ஆரம்பமாகவிருந்த தருணத்தில் சீனர்கள் சோவியத் தலைவர்களைக்கண்டித்திருந்தனர் அதைத் தொடர்ந்து இப்பொழுது சோவியத் யூனியனும் திருப்பித்தாக்கியிருக்கின்றது. சீன-சோவியத் எல்லைப் பேச்சுக்களில் கலந்துகொள்வதற்காக சோவியத் முதலாவது வெளிநாட்டு துணை அமைச்சர் திரு. குஸ்னட்சோவ் ஏற்கனவே பீகிங் சென்றுள்ளார். ஆனுல் பேச்சுவார்த்தைகள் இல்லையா என்பதுபற்றி ஒன்றும் தெரியவில்லை. இந்தப் பேச்சுக்கள் கடந்த மாதமே தோல்வியடைந்து விட்டதாக சிலர் கூறுகிருர்கள்.

## அனலைதீவில் திருடர் தொல்லை

அனலைதீவு, சனி

அனலைதீவில் புகையிலைக் கன்றுகள் திருடப்படுகின்றன. நாற்று மேடைக் கன்றுகள், தோட்டத்தில் நட்டு ஒரு மாதம் சென்ற கன்றுகள் பரவலாகத் தீவு அடங்கிலும் களவு போகின்றன.

வெள்ளச் சேதத்தால் பாதிக்கப்பட்டு அழிந்த கன்றுகள் போக எஞ்சியிருந்த ஒரு சில தோட்டங்களிலுள்ள கன்றுகள் இரவோடு இரவாக மறைகின்றன. திருடர் தொல்லை அதிககாகி வருகின்றது. கன்றுகளைக் களவெடுத்துச் சிலர் நட்டுவைக்க அக்கன்றுகளே மறுநாள் களவு போகின்றனவாம்.

## தப்பியோடிய கைதி பிடிபட்டார்

கண்டி, சனி

நீதிமன்றத்திலிருந்து மறியற்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட போது தப்பியோட முயன்ற கைதி ஒருவரை மறியற்சாலை ஊழியர்கள் துரத்திப்பிடித்துக் கொண்டனர். கண்டி நீதிமன்றத்திலிருந்து றிமாண்டில்வைப்பதற்காகக்கொண்டுசெல்லப்பட்டபோதே இப்ராகிம் பலீல் என்ற கைதி தப்பியோட முயன்ருராம்.

…யாவில் பிறந்து பிரிட்டனில் வாழ்ந்துவந்த ஒருவர் மாஸ்கோவில் பிரிட்டிஷ் பொருட்கள்விற்பனைக்காகச் சென்று அங்கு கைது செய்யப்பட்டு பத்து வருடச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருக்கிருர்.

இந்தத் தகவலை அவரது மனைவி தெரிவித்திருக்கிருர். 20 ஆண்டுகளுக்கு முன் இந்த ரஷ்யர் ரஷ்ய ராணுவத்திலிருந்து வெளியேறியதாகவும் ராணுவச் சட்டங்களை மீறியதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்ததாகத் தெரிகின்றது.

## பாராட்டு விழா

வேலணை, சனி

மண்கும்பான் பயிர்ச்செய்கைக்குழுக் காரியதரிசியாக இருந்து பதவியை ராஜினுமாச் செய்துள்ள திரு சி. கணபதிப்பிள்ளை ஆற்றிய சேவையை பாராட்டி இம்மாதம் 7-ம் திகதி மண்கும்பான் அபிவிருத்திச் சபையால் பாராட்டுவிழா நடத்தப்பட்டது.

இப் பாராட்டுவிழாவுக்கு தலைமை வகித்த திரு மு. சுவாமிநாதன் 7 ஆண்டுகளாக பயிர்ச்செய்கைக் குழுவின்மூலம் திரு கணபதிப்பிள்ளை ஆற்றிய சேவைகளை பாராட்டினுர்,

திருவாளர்கள் வை. குணரத்தினம் ம. விநாயக மூர்த்தி செ. இந்திரசித்து, பொ இராசரத்தினம், க. பாலசிங்கம் ஆகியோரும் பாராட்டுரை வழங்கினர், திரு ஆ. சோமசுந்தரம் மண்கும்பான் அபிவிருத்திச்சபை சார்பாக தட்டமொன்றை அன்பளிப்புச் செய்தார், திரு சி கணபதிப்பிள்ளை நன்றிதெரிவித்துப் பேசினுர்.

மன்னுர்

## சிறுகடற் தொழிலாளர் அச்சம்

முசலி, சனி

மன்னுர் மாவட்டத்தைச் சேர்ந்த கடற் தொழில் பிரதேசமாகிய இலுப்பைக் கடவை, வீடத்தல்தீவு, தேவன்பிட்டி, வெள்ளாங்குளம் ஆகிய பகுதிகளில் டைனமைற் வைத்து மீன் பிடிப்பவர் தொகை அதிகரித்து வருவதாக சிறுகடற் தொழில் செய்பவர்கள் பீதிக்குள்ளாகியுள்ளனர். டைனமைற் வைத்து மீன் பிடிப்பதால், சிறு மீன்கள் அவவே அழிகின்றனவாம்.

டைனமைற் வைத்து மீன் பிடிப்பவர்களைப் பிடிப்பதற்கு மன்னுர் மாவட்ட மீன்பிடி பரிசோதகர் திரு. கே வேலாயுதம் முயற்சித்து வருகிருர். பொலிஸாரும் இவ்விஷயத்தில் கவனமெடுத்து வருகின்றனர்.

…முகாமையாளர் … தென திரு அரசரத்தினம் தலைமையில் கூடிய வேலணை கலைமகள் சனசமூக நிலைய நிர்வாகசபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அல்லைப்பிட்டிச் சந்தியிலிருந்து அராலிச் சந்திவரை பஸ் ஓடும் வீதியை வந்தடைய பிரயாணிகள் இருமைல் தூரம்வரை நடந்து வந்து பஸ் ஏறவேண்டியிருப்பதால் குடிமனை உள்ள மண் குளத்திலிருந்து நவக்கைக் குளம் வரையுள்ள வாய்க்காலை ஆழமாக்கித் திருத்துமாறும் பல ஆண்டுகளாக கவனிக்கப்படாமலிருக்கும் பிரதான வீதிகளைச் செப்பனிடும்படியும் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொள்ளுவதெனவும் பொங்கல் விழாவை இம்முறை மிகச்சிறப்பாக நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

## 'மட்பாண்டத் தொழிற்சாலைக்கு எண்ணைச்சூளைவேண்டும்'

வேலணை, சனி

சங்கானையில் அரசாங்கம் நடத்தும் மட்பாண்டத் தொழிற்சாலைக்கு எண்ணைச் சூளை ஒன்று நிறுவப்படவேண்டியதன் அவசியம் பற்றி வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் கொண்டுவந்த பிரேரணை அண்மையில் நடைபெற்ற யாழ். மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டத்தில் நிறைவேறியது. யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் கச்சேரி மண்டபத்தில் இணைப்புக்குழுக் கூட்டம் நடைபெற்றது.

வடமாகாண புகையிரத சேவையை மாற்றி அமைப்பதற்கு அரசாங்க அதிபரையும், யாழ். மாவட்ட ஆட்சிமன்ற உறுப்பினர்களையும் கொண்ட தூதுக் குழு போக்குவரத்து அமைச்சரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவதெனவும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

உடுப்பிட்டி

## புதிய காரியாதிகாரி பிரிவு: 22-ல் கட்டிடத் திறப்புவிழா

உடுப்பிட்டி, சனி

புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள உடுப்பிட்டித் தொகுதிக்கான காரியாதிகாரி கந்தோர் திறப்புவிழா எதிர்வரும் 22-ந் திகதி நடைபெறவிருக்கிறது. யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. பீட்டர்ஸ் இதைத் திறந்துவைப்பார்.

உபசபாநாயகரும், உடுப்பிட்டி எம். பி. யுமான திரு. மு. சிவசிதம்பரம் தலைமையில் இத்திறப்புவிழா நடைபெறும்.

வடமராட்சி தெற்கு, மேற்கு உடுப்பிட்டிக் காரியாதிகாரி பிரிவெனவும், வடமாரட்சி வடக்கு, கிழக்கு பருத்தித்துறைக் காரியாதிகாரி பிரிவெனவும் புதிய பிரிவுகள் அழைக்கப்படும்.

முன்னர் இருந்த வடமராட்சிக் காரியாதிகாரி அலுவலகம் பருத்தித்துறை காரியாதிகாரி அலுவலகமாக இயங்கும். உடுப்பிட்டிக் காரியாதிகாரி அலுவலகம் வதிரியில் இயங்கும். இரு காரியாதிகாரி பிரிவுகளையும் தற்போதைய காரியாதிகாரி திரு. எஸ். ஜெயகாந்தனே கவனிப்பார்.

## மேல் விசாரணை ஒத்திவைப்பு

கோட்டை, சனி

வருமானவரி சம்பந்தமான சங்கடங்களிலிருந்து விடுவிப்பதாகக்கூறிதோட்ட அப்போதிக்கரி ஒருவரை ஏமாற்ற முயன்ற சம்பவம் கோர்ட்டில் விவரிக்கப்பட்டது.

இங்கிரியாவிலுள்ள அல்வத்துறைத் தோட்ட அப்போத்திக்கரியான டி. எஸ். இளய பெருமா என்பவரை ஏமாற்றமுயன்றதாக பம்பலப்பிட்டியைச் சேர்ந்த பிராங்க் ஸ்ரீல்லரி லுஸியன் குணவர்தன என்பவர் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கின்ருர்.

பொலிஸ்காவலில் இருந்த சாலிமுகம்மது என்பவர் மரணமான சம்பவத்தில் இந்த மூவரும் எதிரிகளாகவிருக்கின்றனர்.

## 4 வீடுகள் இடிந்துவிழுந்தன

உடுப்பிட்டி, சனி

கடந்த சில தினங்களுக்கு முன்பு பெய்த கடும் மழையினுல் கரவெட்டி மேற்கில் நான்கு வீடுகள் இடிந்து வீழ்ந்துள்ளன என்றும், பயிர்கள் வெள்ளத்தினுல் அதிக சேதமடைந்துள்ளன என்றும் கிராமசேவையாளரின் புள்ளிவிபரம் கூறுகின்றது.

இங்குள்ள சனசமூக நிலையங்களுக்குப் புத்துயிர் கொடுக்கும் நோக்கமாக உள்ளூராட்சி அமைச்சரால் நியமிக்கப்பட்ட சனசமூக நிலைய விஸ்தரிப்பு ஆலோசனைக்குழுவின் கூட்டம் அண்மையில் யாழ். அரசாங்க செயலகத்தில் நடைபெற்றது.

உள்ளூராட்சி உதவிஆணையாளர் திரு. ஓ. ஏ. யோசப் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சகல கிராமசபைத் தலைவர்களும் அமைச்சரால்விஷேசமாக நியமிக்கப்பட்ட சனசமூக நிலைய விஸ்தரிப்பு ஆலோசனைக்குழுவின் உறுப்பினர்களாகிய இளைப்பாறிய மாவட்ட நீதிபதி அரசு … பொ. இராசையா, கே. பேரம்பலம், விவசாயமன்னன் எஸ். நல்லதம்பி, திருமதிகள் பேர்ஸி அத்தஞசியார், ஞானமணி செல்லையா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

யாழ். அரசாங்க அதிபர் எவ். ஸி. பீட்டர்ஸ் கூட்டத்தின் நோக்கம்பற்றியும் ஒவ்வொரு உறுப்பினர்களும் ஆற்றவேண்டிய கடமைகள் பற்றியும் பேசினுர்.

இறுதியில் சனசமூக நிலைய விஸ்தரிப்பு விளையாட்டு கலை, சிரமதானம் ஆகியவற்றில் கவனம்செலுத்துவதற்கான தனித்தனி குழுக்களும் தெரிவுசெய்யப்பட்டன.

## பிரசவத்திற்கு இவர்கள் 16 மைல்செல்லவேண்டுமாம்

முசலி, சனி

நட்டான்கண்டல், பனங்காமம் போன்ற கிராமங்களில் வசிக்கும் பிரசவத் தாய்மார் தங்கள் பிரசவத்திற்கு பதினுறு மைல் தொலைவிலுள்ள மாங்குளம் பிரசவ விடுதியையே நாடவேண்டியுள்ளது.

இக்குறையைப் போக்குமுகமாக நட்டான்கண்டலில் ஒரு பிரசவவிடுதியை அமைக்க, வவனியாப் பகுதி சுகாதார அத்தியட்சகரும் மாந்தைக்காரியாதிகாரியும்பனங்காமம் கிராம சபைத் தலைவரும் முயற்சி எடுத்துவருகின்ருர்கள்.

## வித்துவானுக்கு பாராட்டு

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் நாவலர் மகாவித்தியாலயப் பழைய மாணவர் சங்கத்தின் முதலாவது ஆண்டு நிறைவு விழாவும் ஸ்ரீலங்கா சாகித்திய மண்டலத்தின் உயர்தர உறுப்பினர் என்னும் விருதினைப் பெற்றுக் கௌரவிக்கப்பட்ட பண்டிதமணி வித்துவான் திரு. ந. சுப்பையாபிள்ளையின் பாராட்டு விழாவும் இம்மாதம் 15-ந் திகதி வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, பிரம்மஸ்ரீ கி. சீதாராமசாஸ்திரியார், வித்துவான் கே. கே. நடராஜன், பண்டிதை ச. அமிர்தாம்பிகை, சமயப்பிரசார அமைச்சர் மு. மயில்வாகனம் ஆகியோர் விழாவில் கலந்துகொண்டு பாராட்டுரை வழங்குவர். தங்கப் பதக்கமும், பாராட்டுப்பத்திரமும் சங்கம் வழங்கும்.

"தமிழ் இலக்கணத்தின் அறிவுடைக்களஞ்சியமாக இன்று விளங்கும் வித்துவான் ந. சுப்பையாபிள்ளை ஈழநாட்டில் தமிழ் வளரப் பல பண்டிதர்களை உருவாக்கிய பெருமை இவரையே சாரும். அவர் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் தலைமை ஆசிரியராய் இருந்து இளைப்பாறிய பின்பும் தமிழ்ப் பணி புரிவதில் இளைப்பாறவில்லை. இன்னும் பல பண்டிதர்களை உருவாக்கிய வண்ணமே இருக்கிருர். அவர் சேவைக்கு நாம் செய்யும் மதிப்பும், பாராட்டும் தமிழ்த்தாய்க்குச் செய்யும் மதிப்புக்கு ஒப்பாகும்" என மேற்படி சங்கத்தின் செயலாளர் திரு. வ. கந்தசாமி ஒரு அறிக்கை மூலம் தெரிவித்துள்ளார்.

## பங்கீட்டில் மோசடியாம்

ஊர்காவற்றுறை, சனி

தீவுப்பகுதியில் சில கிராமங்களிலுள்ள கடைகளில் பங்கீட்டு அளவில் விநியோகிக்கப்படும் உபஉணவுப் பொருட்கள் சரிவர விநியோகிக்கப்படுவதில்லையாம். மைசூர்பருப்பு ஒரு கூப்பனுக்கு எட்டு அவுன்ஸ் என அறிவிக்கப்பட்டிருந்தும் இங்குள்ள சில கடைகளில் கூப்பனுக்கு ஆறு அவுன்ஸ் வீதம் வழங்கப்படுகிறதாம். தரமான மிளகாய் மற்றப்பகுதிகளில் விநியோகிக்கப்படும்போது இங்குள்ள கடைகளில் நல்ல மிளகாயைப் பெறமுடியாததாய் இருக்கிறதாம்.

பங்கீட்டளவுப் பட்டியல் சில கடைகளில் விளம்பரப்படுத்தப்படாமல் இருப்பதால் பாவனையாளர்கள் தமக்குரிய பங்கைக் கவனித்து வாங்கிக்கொள்ளமுடியாமல் இருப்பதாகக் கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

இருளைப் போக்குவதற்காகத்தான் அறிவு பயன்படவேண்டும். இருளை வளர்ப்பதற்காக அல்ல, தெய்வீக ஒளி இல்லாத கல்வி மனத் தெளிவை ஏற்படுத்திவிடாது.

—மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

**Eelanadu National Tamil Daily**
**Telegram: "EELANADU" Jaffna.**
**Post Box: 49, Jaffna. Telephone: 889.**

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் மார்கழி மாதம் 27-ந் திகதி (11-1-70)


## நல்ல பலன்கள்

இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. வராககிரி வேங்கடகிரி தமது மனைவியாருடன் இன்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தருகின்றார். அவர்களை அன்புடன் வரவேற்கும் பல்லாயிரக் கணக்கான மக்களுடன் நாமும் சேர்ந்து நல்வரவு கூறி வரவேற்கின்றோம்.

திரு. கிரி யாழ்ப்பாணத்துக்குப் புதியவரல்லர்; யாழ்ப்பாணத்தையும் யாழ்ப்பாண மக்களையும் அறியாதவருமல்லர். இந்தியக் குடியரசுத் தலைவராகப் பதவியேற்றபின்னர் தமிழ்நாட்டில் ஒரு வைபவத்தில் கலந்து கொண்ட திரு கிரி யாழ்ப்பாணத்தில் சிறப்புற இயங்கிவரும் கூட்டுறவு வைத்தியசாலைகள் பற்றிக் குறிப்பிட்டு அதே முறையை இந்தியாவிலும் பின்பற்ற வேண்டுமென்று கூறியது யாழ்ப்பாணத்தையும் யாழ்ப்பாண மக்களையும் அவர் நினைவில் என்றும் வைத்துள்ளாரென்பதற்குச் சான்று திரு கிரி இந்தியக் குடியரசுத் தலைவராகப் பொறுப்பேற்ற பின்னர் இன்றுதான் முதல் தடவையாக யாழ்ப்பாணத்துக்கு வருகை தருகிறார். நவ பாரதத்தை புதிய பாதையில் செலுத்தும் மாலுமிகளில் திரு கிரியும் முக்கிய பங்கு வகிக்கின்றார். அவரது வருகையால் யாழ்ப்பாணமும் பொதுவாக இலங்கையும் புத்துணர்ச்சி பெறுமென எதிர்பார்க்கலாம்.

திரு கிரியின் இலங்கை வருகை இப்பொழுதே சில நல்ல பலன்கள் சிலவற்றை அளிக்கத் தொடங்கியிருக்கிறது சென்ற எட்டாந்திகதி முற்பகல் கட்டுநாயகா விமான நிலயத்தில் இந்தியக் குடியரசுத் தலைவர் வந்திறங்கியபோது அவரை வரவேற்க வந்திருந்தவர்களில் இலங்கையிலுள்ள சீனத்

கிரியின் வருகை இந்தியாவும் சீனவும் பகைமையை மறந்து இரு நாடுகளும் மீண்டும் நட்புறவுடன் வாழ வழிவகுப்பதானல் அதுவும் இலங்கைக்குப் பெருமைதான். இலங்கை சிறிய நாடாக இருந்தாலும் அதன் சக்தி குறைவானதல்ல, இந்திய-சீன, இந்திய - பாகிஸ்தான் நட்புறவுக்கு இந்த நாடுகளுடன் நல்லுறவுள்ள இலங்கை தொடர்ந்தும் முயற்சி செய்தால் பயனில்லாமற் போகாது. அது ஆசியாவின் அமைதிக்கும் முன்னேற்றத்துக்குமே பெரிதும் உதவுவதாகவுமிருக்கும்'

கண்டியில் அளிக்கப்பட்ட வரவேற்பில் இலங்கை - இந்திய ஒப்பந்தம் அமுல் செய்யப்படுவது குறித்து திரு கிரி மகிழ்ச்சி தெரிவித்திருப்பதுடன் இந்த ஒப்பந்தத்தின் கீழ் தாயகம் திரும்பும் சகல மக்களினதும் நலன்கருதி மேற்கொள்ளப்படும் சகல முயற்சிகளுக்கும் தாம் தம்மாலான உதவி செய்வதாகவும் தெரிவித்திருக்கிறார், இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினரின் நிலையை நன்கு அறிந்தவர் மட்டுமல்லாது தொழிலாளர் நலனில் மிகுந்த அக்கறையுடைய தொழிலாளர் தோழருமாவார். அவர் இப்போது இலங்கைக்கு வருகைதந்ததன் மூலம் இங்கிருந்துதிரும்பும் இந்திய வம்சாவழியினரான தொழிலாளருக்கும் நன்மை கிடைக்குமென நிச்சயமாகநம்பலாம்.

திரு கிரி இலங்கையில் இந்தியாவின் முதல் தூதுவராக இருந்தபோது அச் சமயம் இங்கு பெருவெள்ளம் ஏற்பட்டது. திரு கிரியின் சிபார்சின்பேரில் இந்திய அரசாங்கம் அப்போது மூன்று லட்சம் ரூபாவை வெள்ள நிவாரண நிதியாக இலங்கைக்கு வழங்கியது இப்போது

# இன்று வரும் இந்திய குடியரசுத் தலைவர்

1969-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20-ம் திகதி ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. வாரககிரி வேங்கட கிரி, தனது கடின உழைப்பாலும், தாய்நாட்டிற்கு ஆற்றிய அரிய பணியாலும் இந்த உயர்ந்த பதவியை அடைந்தார். இந்திய சுதந்திரப்போராட்டத்தில் குதித்த ஜவஹர்லால் நேரு, சுபாஸ் சந்திர போஸ், வல்லபா பட்டேல் போன்ற இந்தியத் தலைவர்களுக்கு இருந்த வசதிகள் திரு. கிரிக்கு இருக்கவில்லை அவர் ஹரோ பள்ளியிலோ அல்லது கேம்பிரிஜ் பல்கலைகழகத்திலோ கல்வி பயிலவில்லை ஒரிஸ்ஸா மாநிலத்திலுள்ள பேராம்பூரில் கல்வி பயின்று பின்னர் கொந்தளிப்பான சூழ்நிலையிலிருந்த டப்ளின் பல்கலைக்கழகத்தில் (அயாலாந்து) சேர்ந்துபடித்தார்.

திரு. கிரி தனது அரசியல் வாழ்க்கையை, மக்களால் போற்றப்பட்டவர் என்ற முறையிலோ அல்லது ஒரு புரட்சிவாதி என்ற முறையிலோ தொடங்கவில்லை, ஒரு சாதாரணதொழிற்சங்கவாதியாகவே தனதுபொது வாழ்க்கையை தொடங்கினர். அந்நிய ஆட்சியின்கீழ் உரிமைகள் இல்லாமல் நலிவுற்றிருந்த இந்தியத் தொழிலாளரின் நலனுக்காக அயராது உழைத்தார் திரு. கிரி. தொழிலாளர் வாழ்க்கை மேம்பட பாடுபட்ட திரு. கிரி ஒரு கொள்கைப்பிரியர். தனது குறிக்கோள்களை அடைவதற்காக அவர் தனது கொள்கையிலிருந்து ஒருபோதும் விலகியதில்லை. திரு. கிரி தனது பொது வாழ்க்கையின் பெரும்பகுதியை அகில இந்திய புகையிரத ஊழியர் சம்மேளனத்தை வளர்க்கும் பணிக்கு அர்ப்பணித்தார்.



ஜனாதிபதி வி வி கிரி தமது குடும்பத்தினருடன் காணப்படுகிறார்

அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸை ஸ்தாபித்த முக்கியஸ்தர்களில் இவரும் ஒருவர்.

தொழிலாளரின் நலனுக்காக உழைத்த திரு. கிரி இந்திய சுதந்திரப்போராட்டத்திலும் ஈடுபட்டு, தனது தாய்நாட்டை அந்நிய ஆட்சியிலிருந்து மீட்க அரும்பாடு பட்டார். நேருவைப் போல் திரு. கிரியும் அஞ்சா நெஞ்சம் படைத்தவர். 1937-ம் ஆண்டு நடந்த சென்னை சட்டசபைத் தேர்தலில், பொபிலி ராஜாவுக்கு எதிராக பொபிலித்தொகுதியிலிருந்து காங்கிரஸ் கட்சி சார்பில் திரு. கிரி போட்டியிட்டார். பொபிலிராஜா ஜஸ்டிஸ் கட்சி சார்பில் பேரட்டியிட்டார். அக்காலத்தில் ஜஸ்டிஸ் கட்சிக்கு பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ஆதரவு இருந்தது. எனவே பொபிலி ராஜாவை தோற்கடிக்கப்பது ஒரு முடியாத காரியம் என்று கருதப்பட்டது. மகாத்மா காந்தியே போட்டியிட்டாலும் பொபிலி ராஜாவை அவரின் சொந்தத் தொகுதியில் தோற்கடிக்க முடியாது என்று அப்போது சென்னையின் கவர்னராகவிருந்த வில்லிங்டன் பிரபு லண்டன் 'டைம்ஸ்' பத்திரிகை நிருபரிடம் கூறினராம். பொபிலி ராஜா பொலிஸின் உதவியுடன் காங்கிரஸ் கட்சியின் தேர்தல் பிரசாரத்தை தடுக்க முயன்றார். சிறிதும் மனம் தளராது திரு. கிரி பல இன்னல்களுக்கு மத்தியில் தனது தேர்தல் பிரசாரத்தை மேற்கொண்டார்.

தேர்தலுக்கு முதல் நாள் தேர்தலின் முடிவு எப்படி இருக்கும் என்று பத்திரிகை நிருபா ஒருவர் கேட்டபோது தான் குறைந்த பட்சம் 6,000 அதிகப்படியான வாக்குகளால் வெற்றி பெறப்போவதாக திரு. கிரி கூறினராம். திரு. கிரியின் வாக்கு பலிக்கத்தான் செய்தது. தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டபோது திரு. கிரி 6,666 அதிகப்படியான வாக்குகளால் வெற்றி பெற்றிருந்தார்.

திரு. கிரி தொழிற்சங்கத் தலைவராய் இருந்த காலத்தில், தொழிலாளரை ஒருபோதும் வன்செயலில் ஈடுபட அனுமதித்ததில்லை. அமைதியான முறையில் வேலை நிறுத்தங்களை மேற்கொண்டு காந்திஜியின் அகிம்சைப்பாதையில் தொழிலாளரை நடாத்தி அவர்களின் சுபீட்சத்திற்காக உழைத்தார். தனது வாழ்நாள் பூராவையும் இந்திய மக்களின் நலனுக்காக அர்ப்பணித்த திரு. கிரி. தனது 77-வது வயதில் இந்திய ஜனாதிபதி பதவியை அடைந்து இந்திய மக்களுக்கு தொடர்ந்து தொண்டு செய்து வருகிறார்.

## ஜயாறன் எழுதுவது..

இன்று காலை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யும் பாரத ஜனாதிபதி கிரி தம்பதிகளுக்கு யாழ். பொது மக்கள் ஏராளமாகக்கூடி அமோக வரவேற்பு அளிக்க வேண்டுமென்று மாநகர சபை மேயர் நாகராஜா அவர்கள் ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளார். இதற்கு இங்குள்ள பொதுமக்கள் செவிசாய்த்து இம்மகத்தான தலைவருக்கு ஒரு மகத்தான வரவேற்பு அளித்து, யாழ்ப்பாணத்தின் பெருமையை உயர்த்துவரென்று நம்புவோம்.

கொழும்பிலும், கண்டியிலும் கிரி தம்பதிகளுக்கு மேலான வரவேற்புக் கிடைத்துள்ளது. தலைநகரில் அரசாங்கத்தலைவர்கள் இருந்து சிறப்பாக வரவேற்றார்கள். இங்கு யாழ்ப்பாணத்துக்கும் நமது மகா தேசாதிபதியும், பிரதமரும் வந்து கிரி தம்பதிகளை வழியனுப்பிவைத்திருந்தால் மிக விசேஷமாக இருந்திருக்கும். அப்படி இல்லாத நிலையில் யாழ்ப்பாணப் பொது மக்களின் பொறுப்பும் முக்கியமும் அதிகமாகின்றன.

சரித்திரமுக்கியம் வாய்ந்த இந்த சந்தர்ப்பத்தில், அதிர்வேட்டுகளும் ஆடம்பரங்களும் இல்லாவிடினும், உண்மையான அன்பு நிறைந்த உள்ளத்துடனே, அத்தம்பதிகளை யாழ்ப்பாணம் வரவேற்று உபசரிப்பதாயின் அதுசாலச்சிறந்ததாக இருக்கும். தலைநகரிலிருந்து புறப்பட்ட பின்பும், இங்கே நம் நகருக்கு வருகைதந்து நம்மை கௌரவித்துள்ள இத்தம்பதிகளுக்கு, நாம் செய்யக்கூடிய பதில் மரியாதை நாம் நம் அன்பு நிறைந்த உள்ளத்தால் வரவேற்று அவர்கள் நீடூழி வாழ்கவென்று வாழ்த்துவது தான்.

0 0 0

பலாலி விமான நிலயத்திலே அரசாங்கப் பொறுப்பிலே ஒரு வரவேற்பு வளைவு விசேஷமாகப் போடப்பட்டுள்ளதாம். யாழ்ப்பாணத்திலுள்ள இலங்கை-இந்திய சங்கத்தார் முட்டாய்க் கடைச் சந்தியிலே ஒரு விசேஷ வரவேற்பு வளைவு அமைத்து ''மகத்தான தலைவர் கிரி அவர்கள் நீடூழி வாழ்க'' என்று வாழ்த்தி தங்கள் அன்பையும மரியாதையையும் தெரிவித்துள்ளனர்.

முன்னர் இந்திய ஜனாதிபதி ராஜேந்திரபிரசாரத் இங்கு வருகைதந்தபோது அச்சமயம் மேயராக இருந்த திரு. அல்பிரட் துரையப்பா, அவரை வரவேற்று உபசாரப்பத்திரம் வாசித்தளித்தார் ஸ்ரீபிரசாத் அவர்கள் நன்றிதெரிவித்துப் பேசியபின், ஒரு விலை உயர்ந்த காஷ்மீர் கம்பளத்தை மேயரிடம் அன்பளிப்பாக அளித்தார். அதை யாழ்ப்பாண மாநகர சபையார் பெருமையுடன் பொதுஜன நூல் நிலயத்தில் காட்சிப்பொருளாக வைத்திருக்கின்றார்கள். அதுமட்டுமன்றி மாநகரசபைக்கு அவர் வந்த வீதிக்கும், ''ராஜேந்திரர் வீதி'' என்று பெயரிட்டுள்ளனர். இப்போது ஜனாதிபதி கிரி விஜயத்துக்கும் அவ்வித கௌரவம் செய்யக்கூடுமென்று தெரிகிறது.

0 0 0

இச்சமயத்திலே யாழ்ப்பாண மாநகரசபையும் மேயரும் இருந்து, இங்கு வந்தபெரிய மனிதர்களை வரவேற்கமுடிவது மிகவும் மகிழ்ச்சிக்குரியதாகும். சமீபத்தில் வதந்தி ஒன்று காதில் விழுந்தது. மேயர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்படலாமென்றும், ஆகவே நிச்சயமற்றநிலையில் ஸ்ரீ கிரி தம்பதிகளுக்கு, மாநகரசபை வரவேற்புக்கு பதில், பொது வரவேற்பு நடத்த ஏற்பாடுசெய்யலாமென்றும் அதிகார வட்டாரம் யோசித்ததாம்.

நல்லவேளையாக அப்படி நடவாமல் மேயர் இருந்து இந்தியத் தலைவரை வரவேற்க முடிவது யாழ்ப்பாணத்துக்குப் பெருமையாகும். இதற்குத்தடை ஏற்படாமல்செய்த யாழ்ப்பாண நகர பிதாக்களுக்கு யாழ் பொதுமக்களின் நன்றி உரித்தாகுமல்லவா?

0 0 0

காயமே கோயிலாகக்கடி மனம்அடிமையாக வாய்மையே தூய்மையாக மனமணியிலிங்கமாக நேயமே நெய்யும் பாலா நிறைய நீரமைய வாட்டிப்பூசினை ஈசனர்க்குப் போற்றவிக் காட்டினேமே.

அப்பர் சுவாமிகள்

# வரலாற்றில் இணைந்த இந்தியாவும் இலங்கையும்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

நல்ல பலன்கள் சிலவற்றை அளிக்கத் தொடங்கியிருக்கிறது சென்ற எட்டாந்திகதி முற்பகல் கட்டுநாயகா விமான நிலையத்தில் இந்தியக் குடியரசுத் தலைவர் வந்திறங்கியபோது அவரை வரவேற்க வந்திருந்தவர்களில் இலங்கையிலுள்ள சீனத் தூதரும் ஒருவர். அவரும் திரு. கிரியும் அன்புடன் கைகுலுக்கிக் கொண்டனர். இந்தியாவுக்கும் சீனத்துக்குமிடையில் எல்லைத்தகராறிருப்பதும் இரு நாடுகளுக்குமிடையில் சண்டை மூண்டதும் சென்ற சில வருடங்களாக இரு நாடுகளுக்குமிடையில் உறவு சீர்குலைந்திருப்பதும் தெரிந்ததே.

திரு கிரியை இலங்கையிலுள்ள சீனத் தூதர் கைகுலுக்கி வரவேற்றது கண்டு திரு கிரியும் மகிழ்ச்சி தெரிவித்திருக்கிறார். இது இந்தியாவும் சீனவும் தம்மிடையேயுள்ள பகைமையை மறந்து நட்புறவு ஏற்படக்கூடிய சூழ்நிலைக்கு ஓர் அறிகுறியாகக் கருதப்படுகிறது. சீன— இந்திய எல்லையில் தகராறு ஏற்பட்டு அது போராக மாறியபோது இரு நாடுகளுக்குமிடையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு முன்னின்று முயற்சி செய்தது இலங்கைதான் என்பதும் குறிப்பிடத் தக்கது. திரு கிரியின் முதல் தூதுவராக இருந்தபோது அச் சமயம் இங்கு பெருவெள்ளம் ஏற்பட்டது. திரு கிரியின் சிபார்சின்பேரில் இந்திய அரசாங்கம் அப்போது மூன்று லட்சம் ரூபாவை வெள்ள நிவாரண நிதியாக இலங்கைக்கு வழங்கியது இப்போது இங்கு மிக அவசியமாகவும் அவசரமாகவும் கோதுமைமா தேவைப்படுகின்றது, பத்தாயிரம்தொன் கோதுமைமாவை இச் சமயத்தில் கடனுக வழங்குவதற்கு இந்தியா முன்வந்திருக்கிறது இந்தியாவிலேயே பல ராஜ்யங்களில் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கும் இச் சமயத்தில் இந்தியா பத்தாயிரம் தொன் கோதுமையை இலங்கைக்கு கொடுக்க முன்வந்திருப்பது சிறிய விஷயமல்ல.

இலங்கைக்கு ஒரே ஒரு அயல்நாடு இந்தியாதான் இங்கு என்ன நேர்ந்தாலும் அயல்நாடுதான் உடனடியாக உதவிக்கு வரமுடியும். இது கடந்த காலங்களில் அனுபவ ரீதியாகக் கண்ட உண்மை.

திரு கிரியின் வருகையால் இலங்கை இந்திய நட்பு மேலும் வலுப்பெறுமென்றும் இரு நாடுகளும் புதிய பாதையில் முன்னேறிச் செல்லுமென்றும் எதிர் பார்ப்போம்.

# வரலாற்றில் இணைந்த இந்தியாவும் இலங்கையும்

வ. பொன்னம்பலம்

ஆசியாவின் வரலாற்றை ஆக்கிவைத்து வருகின்ற இரு பெரும் நாடுகள் இந்தியாவும், சீனமும் ஆகும். வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட காலம் தொட்டு நாகரிகம் கண்ட பெருமை உலகின் சில நாடுகளுக்கே உண்டு. அவற்றுள் பெரிய நாடான இந்தியாவும் சிறிய நாடான இலங்கையும் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.

வரலாற்று முக்கியத்துவம் ாய்ந்த இதிகாசமான இராமாயண காலம் தொட்டு இலங்கை-இந்திய உறவுகள் வளர்ந்து வந்துள்ளன. பம்பாயில் உள்ள இராமர் அணையும், நுவரேலியாவிற்கு அருகமைந்த 'சீத்தா எலியாவும்) அசோகவனம்) இத்தொடர்பை நினைவூட்டுகின்றன.

இந்தியக்விலிருந்து வந்த விஜயனே முதலாவது 'கள்ளத்தோணி' என்று சிலர் வேடிக்கையாகக் கூறுவது பொருந்தும். மகாவம்சம் கூறும் சம்பிரதாயக் கதைகளுள் புத்தபிரானின் வருகையோடு அமைந்தவை இலங்கை. இந்திய உறவை வற்புறுத்தி நிற்கின்றனர். 'நாகதீபத்தை' (நயினுதீவு) ஆண்ட அரசிளங்குமரர் இருவருக்குள் போர் மூண்டதாகவும் புத்தபிரான் விண்ணில் தோன்றி அமைதியேற்படுத்தி ஈழத்தின் மண்ணில் இறங்கியதால் எமது நாடு புனிதப்படுத்தப்பட்டது என்றும் கதை அமைகிறது.

வரலாற்றுக் கால எல்லைக்குள் நாம் பிரவேசிக்கும்போது இந்திய துணைக்கண்டத்தை ஆண்ட அசோகப் பேரரசனின் பிரதிநிதிகளாக மகிந்தனும் சங்கமித்திரையும் வருகை தந்து இலங்கைக்கு புத்த மதத்தை பரப்ப துணையாகின்றனர் என்று வரலாறு கூறுகிறது. அவர்கள் இருவரும் இந்தியாவிலிருந்து ஜம்புக்கோணம் (திருவடிநிலை) என்றும் மாதகல் துறையில் இறங்கி வரலாற்றுப் புகழ் பூத்த கந்தரோடைக்குச் சென்று அங்கிருந்து நில வழி நடந்து மிகிழ்ந்தலையை அடைந்தனர் என்று நம்பப்படுகிறது.

மேற்குக் கரையிலும், கிழக்கிலும் அமைந்த துறைப்பட்டினங்களுள் இந்தியாவுடன் தொடர்பு வளர்த்து வந்த பிரதான இடங்களுள் மாந்தை முன் நிற்கின்றது. வவுனிக்குளப் பகுதியின் நில, நீர்வளங்கள் அங்கு தழைத்தோங்கிய நாகரிகத்தின் சான்றுகள் யாவும் திருக்கேதீஸ்வரத்துக்கு அருகமைந்த மாந்தையின் பெருமையை எமக்கு நினைவுபடுத்துகின்றன.

குப்பப் பேரரசு இந்தியாவில் அரசோங்கிய காலத்தில் நாகபட்டினப் பகுதியில் ஈழத்து புத்த யாத்திரீகர்கள் தங்குவதற்கென மடங்களும் விகாரைகளும் இலங்கை அரசு அமைக்க அனுமதி வழங்கப்பட்டது.

## தமிழரும் சைவரும்

தமிழர்களும், சைவர்களும் தான் இலங்கையில் முதலில் நிலை பெற்றவர்கள் என்பதற்கு சோழ இளவரசன் எல்லாளன் போன்றோரின் கதைகள் எடுத்துக் காட்டாக அமைகின்றன. தேவாரப்பாடல் பெற்ற சிவஸ்தலங்கள் இலங்கையில் திருக்கோணேஸ்வரமும், திருக்கேதீஸ்வரமும் உண்டு. இது தவிர கதிர்காமம் பற்றி அறியாத தென் இந்தியர்களே இல்லை. இலங்கையில் வாழும் இந்துக்கள் எப்படி சிதம்பரத்தைப் பற்றி பக்திப்பரவசத்துடன் பேசிக்கொள்ளுகிறார்களோ அதே போன்று கதிர்காமத்தைப் பற்றியும் தென் இந்தியாவிலும் நல்ல அபிமானம் உண்டு. மேலும் கீரிமலை, மாவிட்டபுரம், நல்லூர் ஆகிய இடங்கள் இலங்கையையும் இந்தியாவையும் இணைக்கின்றன. ஆலயங்களின் வரிசையில் களனிப் பகுதியில் உள்ள விபீஷணன் ஆலயம் சிங்கள பௌத்தர்களால் இன்னும் போற்றி வரப்படுகிறது.

16-ம் நூற்றுண்டின் பின் இந்திய துணைக் கண்டத்தை ஆட்டிப்படைக்க முற்பட்ட ஐரோப்பிய வல்லரசுப் போட்டிகள் இலங்கையையும் சிக்க வைத்துள்ளன. ஆரம்பத்தில் வந்த போர்த்துக்கீசர் இந்தியாவின் கோவாவில் நிலை கண்டு பம்பாயையும் ஆண்டு வந்தனர். ஆனல் இலங்கையின் கரையோர மாகாணங்களை 150 ஆண்டுகள் வரை ஆண்டனர். ஒல்லாந்தர் இந்தோனேஷியாவில் நிலை கொண்டதால் இலங்கையைக் கைப்பற்றுவதில் திருப்தி கண்டார்கள். இந்தியர்வில் நிலை கொள்ள முயன்ற பிரஞ்சு ஏகாதிபத்தியம் இலங்கையிலும் சில வாரங்கள் ஆண்டு வெளியேறிச் சென்றது. இதனுல் திருமலையில் சில காலம் பிரஞ்சுக்கொடி பறந்தது.

ஆங்கில ஏகாதிபத்தியம் இந்தியாவில் நிலை கொண்ட காலத்தில் 1796 முதல் 1802 வரை இலங்கையின் கரையோர மாகாணங்களும் பிரித்தானிய கிழக்கு இந்திய வர்த்தகக் கொம்பனியின் ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்டது. கொம்பனியாரின் ஆட்சியின்கீழ் இலங்கையில் கடும் வரிகள் அறவிடப்பட்டன. ஆங்கில ஆட்சியின் "முதலியார் முறைக்கு" (சென்னை அதிகாரிகளுக்கு) எதிராக கலகம் இடம் பெற்றது. இதனுல் இலங்கை ஓர் நேர் அடிமை நாடாக 1802 முதல் அமைந்தது என்றும் நாடகம் அச்சிடுவது போன்ற கடமைகள் 1935 வரை இந்தியாவிலேயே தொடர்ந்தும் பர்மா, இலங்கை போன்ற நாடுகளுக்கு ஆங்கில அரசின் சார்பில் செய்து வந்தது.

இலங்கையில் வாழும் தமிழ் மக்களை பகை உணர்வுடன் நோக்குவதற்குக் கூட வரலாற்றுக் காரணங்களே பொறுப்பாக நிற்கின்றன. எல்லாளன் துட்டகை முனுவின் மோதல்களும், 10-ம் நூற்றுண்டில் ஈழத்தில் 75 ஆண்டுகள் நிலவிய சோழர் ஆட்சியும், சிங்கள மக்களை, தென்னிந்திய மக்கள் எதிரிகளாக மதிக்கத் தூண்டின. எனினும் சிங்களவரும் தமிழ் நாட்டில் குறிப்பாகப் பாண்டிய அரசுடனும், சேர. அரசுடனும் நீண்ட கால நட்பு வளர்த்துவந்தனர் என்பதற்குப் போதிய சான்றுகள் உண்டு.

ஆங்கில ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கம், இந்தியத் துணைக்கண்டத்தில் தேசிய இயக்கமாக ஆரம்பித்த காலந்தொட்டு, பிரம்ம ஞான சங்கப் பிரதிநிதியான கேர்ணல் ஒல்கொட், நாவலர்பிரான், விவேகானந்தர், தர்மபாலா போன்றோர் இலங்கை—இந்திய உறவை வளர்த்துவந்தனர். ஆனந்தக்குமாரசாமி போன்ற பேரறிஞர்கள் இந்திய—இலங்கை நாடுகளின் பெருமைக்கும், ஐக்கியத்துக்கும் உழைத்துள்ளனர் காந்திஜி, நேரு போன்றோரின் வருகையால் இந்திய--இலங்கை உறவுகள் பலப்படுத்தப்பட்டன.

நவபாரதத்தின் பெருந்தலைவர்கள் வரிசையில் வந்தவர்களைப் பின்பற்றியே எமது நாட்டிலும் தேசிய விழிப்புணர்ச்சி வடிவம் கொண்டது. சேர். பொன். இராமநாதன், சேர் பொன். அருணாசலம் போன்ற தலைவர்கள் இந்திய வழிநின்று தேசியம் வளர்க்க முயன்றனர்.

இந்திய நாட்டின் விடுதலை இயக்க வேகம் எமது நாட்டையும் அவ்வப்போது பாதித்தவண்ணமே இருக்கின்றன. இந்த வரிசையில் நவபாரத்தின் பிரதமர் இந்திராவும், முதுபெருந்தலைவர் வி.வி.கிரியும் மேற்கொண்டுவரும் பிரமாண்டமான மாற்றங்கள் இலங்கையிலும் அதன் நல்ல பிரதிபலிப்புகளை விட்டுச்செல்வது திண்ணம். இந்திய அரங்கில் இந்திராவும், கிரியும் காட்டும் புதிய பாதை மக்கள் சகாப்தம் ஒன்றை அங்கும், இங்கும் உருவாக்கும்.

## 50 கிராம வங்கிகள்

கோட்டை, சனி

மக்கள் வங்கி 50 கிராம வங்கிகளைத் திறந்துவைக்க நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு விவசாயிகளுக்கு நிதியுதவிசெய்வதற்காகவே இக் கிராமவங்கிகள் நிறுவப்படுகின்றன

இவ்வங்கிகளை நிறுவுவதற்கு விவசாயப்பகுதியில் பொருத்தமானஇடங்களைத் தெரிவு செய்யுமாறு அரசாங்க அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது இந்த வங்கிகள் விவசாயிகளுக்கு பயிர் செய்கைக்குமட்டு மன்றி வீடுகள் கட்டுவதற்கும் நிதிவசதி வழங்கும் எனத் தெரிகிறது.

சங்கத்தார் முட்டாய்க் கடைச் சந்தியிலே ஒரு விசேஷ வரவேற்பு வளைவு அமைத்து "மகத்தான தலைவர் கிரி அவர்கள் நீடூழி வாழ்க" என்று வாழ்த்தி தங்கள் அன்பையும மரி

...யே தூய்மையாக மனமணி யிலிங்கமாக நேயமே நெய்யும் பாலா நிறைய நீரமைய வாட்டிப்பூசினே ஈசனர்க்குப் போற்றவிக் காட்டினேமே.

அப்பர் சுவாமிகள்

# நகைகளுடன் ஒருவர் மறைவு

## அவரது நண்பர் கைது

புத்தூர், சனி

அடைவுவைப்பதற்கென கொடுக்கப்பட்ட தங்கநகைகளுடன் மறைந்துவிட்டாராம் ஒருவர். இதுபற்றி அச்சுவேலிபொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

அச்சுவேலியைச் சேர்ந்த சின்னர் கந்தசாமி என்பவர் அதேயிடத்தைச் சேர்ந்த க. இராசரத்தினம் என்பவரிடம் அடைவுவைப்பதற்காக சங்கிலி, காப்பு,மோதிரம் முதலியனவற்றைக் கொடுத்து விட்டதாகவும், இவற்றுடன் சென்றவர் இதுவரை திரும்பவில்லை என்றும் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுசம்பந்தமாக நகைகளைக் கொண்டுசென்றவருடன் கூடித்திரியும் அவரது நண்பர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார்

# புதிய இருபத்திமூன்று தமிழ் டாக்டர்கள்

## 17 பேர் நூனசித்தி

கண்டி, சனி

பேராதனைப்பல்கலைக் கழகத்திலிருந்து இவ்வாண்டு வெளியேறியுள்ள டாக்டர்களின் விபரம் வருமாறு:-

கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற வைத்திய இறுதிப் பரீட்சையில் 22 தமிழ் மாணவர்களும் ஒரு முஸ்லீம்மாணவனும் சித்தியடைந்துள்ளனர்.

ஜே ஏ ஆனந்ததாஸ், ஜி யோகரத்தினம், செல்வி பி சௌந்திரராஜா, செல்வி எஸ் சிவதாசன், பி சிவயோகன், ஈ ஜே சிற்றம்பலம், எஸ் சண்முகலிங்கம் ஏ செல்வரத்தினம், எஸ் எஸ் செல்வகணேஷ், எஸ் ரி ராமச்சந்திரன், செல்வி எம் ராஜகேசரி, செல்வி பி மயில்வாகனம், எம் ஆர் பதுார்தீன், எஸ் பாலச்சந்திரன், எம்] எம் கணேஷானந்தன், எம் கணேசராஜா வி குணசிங்கம், ரி குணசுந்தரம், எஸ் கந்தசாம், செல்வி டபிள்யூ கந்தையா ஈ காசிநாதன், எம் கோவதன்ராஜா.

### நூனசித்தி

எஸ் ஆனந்தகோபன், செல்வி திருநாவுக்கரசு, ரி திருநாவுக்கரசு, கே ஏ தியாகராஜா, எம் எஸ் சுலைமான், பி சிவபாலன். எஸ் ஜே பி அரியராஜ். பி ஆறுமுகராசா, ரி ஜெகதீசன், கே கணபதிப்பிள்ளை செல்வி எஸ் கணபதிப்பிள்ளை, ஸி மகேந்திரன், செல்வி ரி பொன்னுத்துரை, ரி பிரேமச்சந்திரா, எஸ் நிரஞ்ஜன், செல்வி எம் ரி எம் சவரிமுத்து. ஸி ஸி கே செல்வத்துரை.

## சமாதான

1-ம் பக்கத் தொடர்ச்சி

மண்டபத்திற்கு அடிகோலிய பெரியார்களுள் ஒருவரான இவர் கொழும்பு கோட்டையில் இந்து கலாசார நிலையம் ஒன்றை நிறுவுவதற்கு இன்று உழைத்து முக்கிய பங்கெடுத்து வருகிறுர்.

திரு. சின்னத்தம்பி நேற்று கொழும்பு மாவட்ட நீதிபதி திரு டி. டி. நிஸங்கா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

கோண்டாவில் வாசியான திரு. சின்னத்தம்பி கொக்குவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ஆனுல் கடந்த 45 வருடங்களாக இவரது சேவை தென்னிலங்கையில் சைவத்தையும் தமிழையும் வளர்க்கும் பணியிலேயே பயன்பட்டுள்ளதென்பது இங்கு குறிப்பிடத் தக்கது. கொழும்பிலுள்ள கோண்டாவில் முன்னேற்றச் சங்கத்தின் தலைவராகக் கடமையாற்றும் இவர் மற்றும் பல்வேறு சங்கங்களிலும் பங்கு கொண்டு பணியாற்றி வருகின்றுர்.

# தாய்க்கும் மகளுக்கும் ஒரேநாளில் திருமணப்பதிவு

யாழ்ப்பாணம், ஞாயிறு

தாய்க்கும், மகளுக்கும், தந்தைக்கும், மகனுக்கும் ஒரே நாளில் திருமணப்பதிவு நடந்த சம்பவம் கைதடியில் நடந்துள்ளது.

சுமார் 40வருடங்களுக்கு முன்பு தேசவழமைப்படி திருமணம் செய்துகொண்டு வந்தவர்கள் தங்கள் பிள்ளைகளுடன் வந்து எல்லாரும் கைதடி கிராமசேவகர் காரியாலயத்தில் தங்கள் பெயர்களைப் பதிவுசெய்துகொண்டார்கள்.

கைதடி கிராமசேவையாளர் திரு. மு. கந்தையா திருமணப்பதிவு செய்வதற்கான ஒழுங்குகளைச் செய்து கொடுத்தார். 470 திருமணங்கள் அங்கு பதிவு செய்யப்பட்டன.

இதுவரை தங்கள் திருமணத்தைப் பதிவுசெய்யாத எல்லோரும் பதிவுசெய்து கொள்ள வேண்டும் என உள்நாட்டமைச்சர் டாக்டர் டபிள்யூ தஹநாயக்கா விடுத்த வேண்டுகோளின் படி இந்நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## விசேஷ சபை

கோட்டை, சனி

கல்வியமைச்சர் திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லை பாடசாலைகளுக்கும்சியவச நூல் நிலையங்களுக்கும் தேவையான புத்தகங்களைத்தெரிவு செய்வதற்கு விசேஷ சபையொன்றைநியமித்துள்ளார்.

பாடசாலை நூல் நிலையங்களுக்குத் தேவையான நூல்களையும் ஒவ்வொரு பிரதேச கல்வியதிகாரிகள் மூலமாக அனுப்பாமல் நேரடியாகவே பாடசாலைகளுக்கு அனுப்பக் கல்வியமைச்சு தீர்மானித்துள்ளதாக கல்வியமைச்சைச்சேர்ந்த பிரமுகர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

## திருட்டு

புத்தூர், சனி

புத்தர் கலட்டியில் தனியார் கடை ஒன்றின் கதவை உடைத்துத்திருடர் பல பொருட்களைத்திருடிச் சென்றுள்ளனராம். இச்சம்பவம் கடந்தஇரவுநடைபெற்றது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஜனவரிமாதம் 11-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org